தின பூமி
thinaboomi.com
திருச்சி, சனி, அக்டோபர் 01, 2022 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00



அமெரிக்க நாடாளுமன்றத்தில் லட்சக்கணக்கானோருக்கு கிரீன் கார்டு வழங்கும் மசோதா தாக்கல்


...2-ம் பக்கம்

பா.ஜ.க. ஆளும் கர்நாடகாவில் 23-ம் நாள் நடை பயணத்தை தொடங்கினார் ராகுல் காந்தி

...3-ம் பக்கம்

தேசிய விளையாட்டு போட்டி: 49 கிலோ எடைப் பிரிவில் மீராபாய் சானுக்கு தங்கம்

...7-ம் பக்கம்






மகேந்திரா சிட்டியில், 1,100 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள பெகாட்ரான் நிறுவனத்தின் ஸ்மார்ட்போன் உற்பத்தி தொழிற்சாலையை நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய மின்னணுவியல் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர், தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட கலெக்டர் ஆர்.ராகுல்நாத், பெகாட்ரான் நிறுவனத்தின் தலைவர் ஜெங் ஜியான் ஜாங், நிறுவனத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தை செல்போன் உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில் செயல்பட்டு வருகிறோம்

## முதல்வர் மு.க. ஸ்டாலின் பேச்சு

செங்கல்பட்டு, அக். 1-

தற்போது சீனாவில் தான் புதிய செல்போன் மாடல்கள் பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன. அதனை மாற்றி தமிழகத்தையும் அத்தகைய உற்பத்தி மையமாக மாற்றிட வேண்டும் என்ற நோக்கோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

செங்கல்பட்டில் ஆப்பிள் நிறுவனத்திற்கு உதிரிபாகங்கள் தயாரிக்கும் பெகாட்ரானின் நவீன ஆலை திறப்பு விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கலந்து கொண்டு பேசியதாவது,

தைவானை சேர்ந்த நிறுவனம் தமிழகத்தில் தொழிற்சாலையை திறந்துள்ளது. அந்நாட்டை சேர்ந்த பல நிறுவனங்கள், தமிழகத்தில் மேலும் பல தொழிற்சாலைகளை துவங்க வேண்டும். புதிய தொழில் நிறுவனங்கள் உருவாக்குவதை ஊக்கப்படுத்தி வருகிறோம். ஸ்ரீ பெரும்புதூர், ஓசூர் மற்றும் கோவை என்று மின்னணு உற்பத்தி மையங்கள் பெருகி வருகின்றன. பெண்கள் பணிபுரிவதற்கு ஏதுவான சூழ்நிலை தமிழகத்தில் நிலவுகிறது. அதிகமான பெண்கள் வேலைக்கு செல்லும் மாநிலம் தமிழகம். இதற்காக அரசு பஸ்களில் இலவசமாக பயணம் மேற்கொள்ளும் திட்டத்தை கடமையாக செய்து வருகிறோம். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை சிறப்பாக பராமரிக்கப்படுகிறது. பெக்ட்ரான் மூலம் பெண்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழகம். உற்பத்தியில், வர்த்தகத்தில், தொழிலில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்திய அளவில் வணிகம் செய்வதில் எளிதான மாநிலம் என்ற பட்டியலில் தமிழகம் இடம்பெற்றுள்ளது. மின்னணுவியல் துறையை வளர்ந்து வரும் துறையாக தமிழக அரசு வகைப்படுத்தி உள்ளது. அந்த துறையில் ஏராளமான உற்பத்தி திட்டங்களை தமிழக அரசு ஈர்த்துள்ளது. 2030க்குள் தமிழக பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்த வேண்டும் என்பது எங்களது லட்சியம். உயர் தொழில்நுட்பத் திட்டங்களையும், பெருமளவில் வேலைவாய்ப்பினை அளிக்கும் திட்டங்களையும் கொண்டு வர தமிழக அரசு பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது. ஒவ்வொரு துறையிலும், மதிப்புக்கூட்டு உற்பத்தியை மேற்கொள்ளும் திட்டங்களையும் பன்முகப்படுத்தும் முயற்சிகளையும் நாங்கள்

(கடைசி பக்கம் பார்க்க)

ஊர்வலத்திற்கு அனுமதி மறுத்ததை எதிர்த்து வழக்கு:

# நவம்பர் 6-ல் ஆர்.எஸ்.எஸ். பேரணி நடத்த அனுமதி வழங்க வேண்டும்

## தமிழக காவல்துறைக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, அக். 01-

தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ்.அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் நவம்பர் 6-ந்தேதி ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு அனுமதியளிக்க வேண்டும் என்று தமிழக காவல்துறைக்கு சென்னை ஐகோர்ட் உத்தவிட்டுள்ளது.

**ஐகோர்ட் அனுமதி....**

தமிழகத்தில் வருகிற அக்டோபர் 2ம் தேதி ஆர்.எஸ்.எஸ். கமிட்டியை சேர்ந்தவர்கள் அணிவகுப்பும் பேரணியும் நடத்துவதற்கு அனுமதி கோரியிருந்தனர். தமிழகம் முழுவதும் சுமார் 50 இடங்களில் பேரணி நடத்துவதற்கு அனுமதி கேட்கப்பட்டிருந்த நிலையில், ஐகோர்ட் நிபந்தனைகளுடன் பேரணி நடத்த அனுமதி வழங்கியது.

**போலீசார் மறுப்பு...**

தற்போதைய சட்டம் ஒழுங்கு பிரச்சனையை காரணம் காட்டி போலீசார் பேரணிக்கு அனுமதி மறுத்துள்ளனர். தற்போதைய சட்டம் ஒழுங்கு சூழலில், மத்திய அரசால் 'பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா' அமைப்பு தடை செய்யப்பட்ட நிலையில் அதற்கு எதிராக இஸ்லாமிய அமைப்புகள் கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தி வருகின்றன.

**அனுமதி கேட்டு...**

மாநிலத்தில் மத உணர்வுகளை தூண்டும் பல்வேறு நிகழ்வுகள் சமீபத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் சூழலில், ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்திற்கு அனுமதி கேட்கப்பட்டுள்ள அன்று சமய நல்லிணக்க பேரணி என்ற பெயரில் சில அமைப்புகள் ஊர்வலம், மனித சங்கிலி போன்றவற்றை நடத்த அனுமதி கோரியுள்ளது.

**காவல்துறை அறிவிப்பு**

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை காக்கவும், கண்காணிக்கவும் காவல் துறையினர் முழு வீச்சில் இரவு பகலாக அனைத்து இடங்களிலும் ரோந்து உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சூழலில், ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட எந்த அமைப்புகளின் ஊர்வலம் மற்றும் கூட்டங்களுக்கு அனுமதி அளிக்க இயலாது என தமிழக காவல்துறை தெரிவித்திருந்தது.

**சீராய்வு மனு தாக்கல்...**

இதற்கிடையே ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு அனுமதியளிக்க பிறப்பித்த தனிநீதிபதியின் உத்தரவை மறு ஆய்வு செய்ய கோரி தமிழக காவல்துறை சென்னை ஐகோர்ட்டில் சீராய்வு மனு தாக்கல் செய்தது. மனுவில் சட்டம்- ஒழுங்கு பிரச்னை ஏற்படும் சூழல் உள்ளதாக தமிழக காவல் துறை குறிப்பிட்டிருந்தது. மேலும், ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு அனுமதியளித்த உத்தரவுக்கு தடை விதிக்க கோரியும் காவல் துறை தரப்பில் மற்றொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது.

**நவம்பர் 6-ல்....**

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, அக்டோபர் 2ம் தேதி அன்று ஆர்.எஸ்.எஸ். பேரணி நடத்த அனுமதிக்க முடியாது என காவல்துறை தரப்பில் உயர்நீதிமன்றத்தில் வாதம் செய்தது. இந்நிலையில், தமிழகத்தில் அக்டோபர் 2-ம் தேதிக்கு பதில் நவம்பர் 6ம் தேதி

(கடைசி பக்கம் பார்க்க)

பொதுக்குழு வழக்கில் விசாரணை முடியும் வரை

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் தேர்தலை நடத்த மாட்டோம்

## சுப்ரீம் கோர்ட்டில் இ.பி.எஸ். தரப்பு உறுதி

புதுடெல்லி, அக். 01-

ஓ.பி.எஸ். தொடர்ந்த பொதுக்குழு வழக்கில் விசாரணை முடியும் வரை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் தேர்தலை நடத்த மாட்டோம் என்று சுப்ரீம் கோர்ட்டில் இ.பி.எஸ். தரப்பு உறுதியளித்துள்ளது.

அ.தி.மு.க. பொதுக்குழுவுக்கு எதிராக ஓ. பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு நேற்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த வழக்கை தசரா விடுமுறைக்குப் பின்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர்.

அப்போது ஓ.பி.எஸ். தரப்பில், பொதுச் செயலாளர் பதவிக்கு தேர்தலை நடத்த நிர்வாகிகள் தயாராகி வருகின்றனர். எனவே, வழக்கு விசாரணைக்கு வரும்வரை தேர்தல் நடத்த தடை விதிக்க வேண்டும். அல்லது, தற்போதைய நிலையே தொடர உத்தரவிட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், இபிஎஸ் தரப்பிடம் "தற்போது நீங்கள்தானே பொறுப்பில் இருக்கிறீர்கள், பிறகு தேர்தலை நடத்துவதற்கு என்ன அவசரம்?" என்று கேள்வி எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து இபிஎஸ் தரப்பில், "பொதுச் செயலாளர் தேர்தலை நடத்தமாட்டோம்" என்று ஒப்புதல் அளித்தனர். இதனைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், ஓபிஎஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கில், இபிஎஸ் தரப்பு பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர். மேலும் அ.தி.மு.க. தொடர்பான வழக்குகளின் விசாரணை அனைத்தும் தசரா பண்டிகை விடுமுறைக்கு பின் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளது. சுப்ரீம் கோர்ட்டின் இந்த தகவலை அடுத்து நவம்பர் மாதம் 21-ம் தேதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

அதிவேக இணைய வசதியை கொடுக்கும்

# 5ஜி சேவையை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்



புதுடெல்லி, அக். 01-

அதிவேக இணைய வசதியை கொடுக்கும் 5ஜி சேவையை பிரதமர் நரேந்திரமோடி டெல்லி பிரகதி மைதானத்தில் இன்று தொடங்கி வைக்கிறார்.

சமீபத்தில் 5 ஜி அலைகற்றை ஏலத்தை மத்திய அரசு நடத்தியது. இதில் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று ஏலம் எடுத்தது. 5ஜி சேவையைப் பொறுத்தவரையில் அலைவரிசை ஏலம் அனைத்தும் முடிந்த நிலையில் பெரும்பாலான அலைவரிசையை வாங்கிய ஜியோ நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. ஏர்டெல் இரண்டாம் இடத்தில் உள்ளது.

இதற்கிடையே நாட்டில் 5 ஜி சேவை விரைவில் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. 5 ஜி தொழில்நுட்பம் தடையற்ற சேவை, உயர் தரவு விகிதம், விரைவான செயல்பாடு ஆகியவற்றுடன் மிகவும் நம்பகமான தகவல் தொடர்புகளை வழங்கும். இது ஆற்றல் திறன், அலைக்கற்றை திறன் மற்றும் நெட்வொர்க் செயல் திறனை அதிகரிக்கும்.

இந்நிலையில் அதிவேக இணைய வசதியை கொடுக்கும் 5 ஜி தொழில்நுட்பம் இந்தியாவில் வரும் அக்டோபர் மாதம் முதல் பயன்பாட்டுக்கு வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 10 மணிக்கு டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் 5ஜி சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். இந்திய மொபைல் காங்கிரசின் (ஐ.எம்.சி.) 6-வது பதிப்பையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார். ஐ.எம்.சி. 2022 "புதிய டிஜிட்டல் யுனிவர்ஸ்" என்ற கருப்பொருளுடன் அக்டோபர் 1 முதல் 4-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இலங்கை சிறைகளில் உள்ள

# தமிழக மீனவர்களை மீட்க எவ்வளவு நாட்கள் ஆகும்?

## மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் கேள்வி

புதுடெல்லி, அக். 01-

இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை மீட்க எவ்வளவு நாட்கள் ஆகும்? என்று மத்திய அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ள சுப்ரீம் கோர்ட், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களை விடுவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை சிறையில் வாடும் தமிழ்நாடு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி வழக்கறிஞர் சிஜின் என்பவர் தொடர்ந்துள்ள மனுவை சுப்ரீம் கோர்ட் விசாரணை செய்து வருகிறது. இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் அனிருந்த பொஸ் மற்றும் விக்ரம்நாத் அமர்வில் விசாரணைக்காக வந்த போது ஆஜரான சிஜின் 90-ருக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை சிறையில் அடைத்துவைக்கப்பட்டுள்ளதால். அவரது குடும்பத்தினர் வருமானம் இன்றி தத்தளிப்பதாக கூறினார்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதலும், துப்பாக்கி சூடுகளும் தொடர்வதாக முறையிட வழக்கறிஞர், இந்த பிரச்சனையை தீர்க்க உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கூறினார்.

இதற்க்கு பதிலளித்த ஜெனரல் நடராஜன், இது இருநாடுகள் தொடர்புடைய பிரச்சனை என்பதால் மத்திய அரசு ராஜாங்க ரீதிலான பேச்சுவார்த்தைகளுக்கு முயற்சி செய்து வருவதாக கூறினார். அப்போது குறிப்பிட்ட நீதிபதிகள் எத்தனை காலம்தான் தமிழக மீனவர்கள் இலங்கையில் சிறையில் அவதிபட வேண்டும் என்றும் இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை மீட்க எவ்வளவு நாட்கள் ஆகும்? என்று கேள்வியெழுப்பினார்.

பின்னர் தமிழக மீனவர்களை மீட்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து 2 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட நீதிபதிகள் வழக்கு விசாரணையை அக்டோபர் 14-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# பொறியியல் கல்லூரிகளுக்கு வரும் 3-ம் தேதியும் விடுமுறை: அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு

சென்னை, அக். 01-

அண்ணா பல்கலை. மற்றும் உறுப்பு பொறியியல் கல்லூரிகளுக்கு வரும் 3-ம் தேதியும் விடுமுறை என அறிவிக்கப்பட்டுள்ளதால் இன்று முதல் தொடர்ந்து 5 நாட்களுக்கு விடுமுறை கிடைத்துள்ளது.

காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அதனை தொடர்ந்து 4, 5 ஆகிய தேதிகளில் ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி பண்டிகை கொண்டாடப்படுகிறது. அக்டோபர் 1-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை அரசு பள்ளி மாணவர்களுக்கு காலாண்டு விடுமுறையும் விடப்பட்டுள்ளது. இதே போன்று, அனைத்து கல்லூரிகளும் விடுமுறை அளித்துள்ளது.

1-ம் தேதி சனிக்கிழமை அரசு விடுமுறை நாளாகும். 4 நாட்கள் தொடர் விடுமுறை வருகிற நிலையில் அக்டோபர் 3-ம் தேதி மட்டும் வேலை நாளாக உள்ளது. அன்று ஒரு நாள் விடுப்பு அனுமதிக்கப்பட்டால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுத்துறை நிறுவன பணியாளர்களுக்கு 5 நாட்கள் தொடர் விடுமுறை கிடைக்கிறது.

இந்த நிலையில் அண்ணா பல்கலைக்கழகம் உறுப்பு பொறியியல் கல்லூரிகளுக்கு வரும் 3-ம் தேதியும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், இன்று முதல் தொடர்ந்து 5 நாட்களுக்கு விடுமுறை கிடைத்துள்ளது. இதன் மூலம் ஆயுதபூஜை விடுமுறைக்கு சொந்த ஊர்களுக்கு படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மார்க்கெட் விலை நிலவரம்

BSE ↑ 1,016.96 பாயின்ட் 57426.92

NSE ↑ 276.25 பாயின்ட் 17094.35

**தங்கம்** 1 சவரன் ₹37,576 1 கிராம் ₹4,697

**வெள்ளி** 1 கிலோ ₹61,500 1 கிராம் ₹61.50

**டாலர்** ₹81.35


**பெட்ரோல்** ₹102.63 **டீசல்** ₹94.24

### அமெரிக்க நாடாளுமன்றத்தில்

# லட்சக்கணக்கானோருக்கு கிரீன் கார்டு வழங்கும் மசோதா தாக்கல்

**வாஷிங்டன், அக். 01-**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் லட்சக்கணக்கானோருக்கு கிரீன் கார்டு வழங்கும் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.



அமெரிக்காவில் குடியேறியுள்ள இந்தியர்கள் உள்ளிட்ட பிற நாட்டவர்கள் அங்கு நிரந்தரமாக வசிப்பதற்கு வழங்கப்படும் ஆவணம் கிரீன் கார்டு என அழைக்கப்படுகிறது. ஆனால் சமீப காலமாக இது கிடைப்பதில் கடும் கட்டுப்பாடுகள் நிலவி வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்காவின் எச்-1பி விசா மற்றும் நீண்ட கால விசா வைத்திருப்போர் கிரீன் கார்டு பெற ஏதுவான சட்ட மசோதாவை அந்த நாட்டின் நாடாளுமன்ற செனட் சபையில் ஆளும் ஜனநாயக கட்சி எம்.பி.க்கள் அலெக்ஸ் பாடில்லா, எலிசபெத் வாரன், பென் ரே லுஜான், கொறடா டிக் டர்பின் ஆகியோர் கொண்டு வந்தனர்.

இதுபற்றி அலெக்ஸ் பாடில்லா கூறும்போது, இந்த மசோதா லட்சக்கணக்கான புலம் பெயர்ந்தோர் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும். பல்லாண்டு காலமாக அமெரிக்காவில் வாழ்ந்து, வேலை செய்து, பங்களிப்பு செய்கிறவர்கள் நிச்சயமற்ற எதிர்காலம் குறித்த அச்சம் இன்றி சுதந்திரமாக வாழ வழிபிறக்கும் என குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் தொடர்ந்து குறைந்தது 7 ஆண்டுகள் வசித்து வருபவர்களுக்கு கிரீன் கார்டு கிடைக்க இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மசோதா வை அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டு கிரீன் கார்டு வழங்கப்படாதா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் லட்சோப லட்சம் குடியேறிகளின் வரவேற்பை பெற்றுள்ளது.

# காபூல் கல்வி நிறுவனத்தில் குண்டுவெடிப்பு: 19 பேர் பலி

**காபூல், அக். 01-**

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று நடந்த சக்தி வாய்ந்த குண்டுவெடிப்பில் 19 பேர் உயிரிழந்தனர். 27 பேர் காயமடைந்தனர்.

நேற்று காலை 7.30 மணியளவில் காபூலில் உள்ள காஜ் கல்வி நிலையத்தில் மாணவர்கள் தேர்வு எழுத மையத்திற்கு வந்த போது இந்த திடீர் குண்டுவெடிப்பு சம்பவம் நடந்துள்ளது. இது வரை கிடைத்த தகவலின் படி, பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் ஆவர். இது குறித்த தகவல் அறிந்ததும், பாதுகாப்பு படையினர் குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்திற்கு சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். முழுமையான உயிர்ச்சேதம் குறித்த தகவல் இன்னும் வெளியாகவில்லை.

கல்வி நிலையத்தில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தும் முயற்சியாக ஒரு பயங்கரவாதி, மாணவர்கள் கூட்டத்தில் ஒருவனாக புகுந்து இந்த சதித் தாக்குதலை நிகழ்த்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஓராண்டு ஆட்சியை நிறைவு செய்திருக்கும் நிலையில், தொடர்ந்து குண்டுவெடிப்பு சம்பவங்கள் அரங்கேறி வருவது குறிப்பிடத்தக்கது.

# பெண் நீதிபதியை மிரட்டியதாக வழக்கு: நேரில் ஆஜராகி மன்னிப்பு கோரிய இம்ரான்கான்

**இஸ்லாமாபாத், அக். 01-**

பெண் நீதிபதியை மிரட்டியதாக தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மன்னிப்பு கோரினார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் உதவியாளர் ஷாபாஸ் கில், தேசத்துரோக குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்லாமாபாத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய இம்ரான்கான், காவல்துறை அதிகாரிகள், தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் தனது அரசியல் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய போவதாக மிரட்டல் விடுத்தார்.

மேலும், காவல்துறை வேண்டுகோளின்படி, கில்லை இரண்டு நாள் காவலில் எடுக்க அனுமதி வழங்கியதற்காக பெண் நீதிபதி ஜெபா சவுத்ரி மீது நடவடிக்கை எடுக்க உள்ளதால் அவர் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இம்ரான்கான் தமது பேச்சின்போது குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து அவர் மீது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், இம்ரான் கான் கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் தமது வழக்கறிஞருடன் நேரில் ஆஜராகி தமது பேச்சுக்கு மன்னிப்பு கேட்டார். இதையடுத்து அங்கிருந்து புறப்பட்டு சென்றார். இம்ரான் கான் வருகையால் அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

### அமெட் பல்கலை. - தமிழக அரசு இணைந்து

# ஒரே நாளில் ரூ. ஒரு கோடியில் கைத்தறி துணிகள் விற்பனை செய்ய திட்டம்

**சென்னை, அக். 01-**

அமெட் பல்கலைக் கழகத்துடன் தமிழக அரசின் காதி மற்றும் கைத்தறித் துறை ஆகியன இணைந்து ஒரே நாளில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான துணிகள் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

தமிழக அரசின் காதி மற்றும் கைத்தறித் துறையின் கீழ் நெசவுப் பணி செய்யும் நெசவாளர்களுக்கு கை கொடுத்து உதவும் பொருட்டு, அவர்களால் தயாரிக்கப்பட்ட துணிகள் மற்றும் பொருட்களை காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2, ஞாயிற்றுக்கிழமை அன்று அமெட் பல்கலைக்கழகத்தின் சுமார் 4000 மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையில் கருணாநிதி சாலை மற்றும் ராஜீவ் காந்தி சாலை பகுதிகளில் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வதென்ற ஒரு சமூக சேவைத் திட்டத்தை முன்னெடுக்க உள்ளனர். இத்திட்டத்தின்படி ஒரே நாளில் குறைந்தது ரூ. ஒரு கோடி மதிப்பிலான காதி மற்றும் கைத்தறி துணிகளுடன், கிராமப் பொருட்களையும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த சமூக சேவைத்திட்டத்தினை அமைச்சர் ஆர். காந்தி, நாளை அக்டோபர் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் அமெட் பல்கலைக் கழக வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். அமெட் பல்கலைக் கழகத்தின் 4000 மாணவர்களைக் கொண்டு ஒரே நாளில் ரூ. ஒரு கோடி மதிப்பிலான காதி மற்றும் கைத்தறி பொருட்களை விற்பனை செய்ய இயலும் போது தமிழகத்தில் உள்ள 59 பல்கலைக் கழகங்கள் மற்றும் 2140 கல்லூரிகளில் பயிலும் 17,42,000 மாணவர்களை கொண்டு காதி மற்றும் கைத்தறி பொருட்களை முழுமையாக விற்பனை செய்வது எளிதானதாகும் என கருதப்படுகிறது. எனவே, கருணாநிதி சாலை மற்றும் ராஜீவ் காந்தி சாலை பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் காதி, கைத்தறி துணிகள் மற்றும் கிராமப் பொருட்களை வாங்கி இந்த புதிய முயற்சிக்கு உறுதுணையாக இருந்து நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவ வேண்டுமென தமிழக அரசின் சார்பிலும், அமெட் பல்கலைக் கழகத்தின் சார்பிலும் கேட்டுக் கொள்ளப்படுவதாக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தெற்கு உக்ரைனில் ரஷ்ய படைகள் குண்டுவீசி தாக்குதல்: 23 பேர் பலி

**கீவ், அக். 01-**

தெற்கு உக்ரைனில் அமைந்துள்ள ஜபோரிஜியாவில் பொதுமக்கள் சென்ற வாகனம் மீது ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதலில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைன் நாட்டின் மீது கடந்த 7 மாதங்களாக ரஷ்யா போர் நடத்தி வருகிறது.



இந்த போரில் உக்ரைனின் பல்வேறு நகரங்களை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது. மேலும் பல நகரங்களை கைப்பற்ற ரஷ்ய படைகள் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றன. இந்த நிலையில், ஜபோரிஜியாவில் பொதுமக்கள் சென்ற வாகனம் மீது ரஷ்ய படைகள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 28 பேர் காயமடைந்துள்ளதாக ஜபோரிஜியா பிராந்திய கவர்னர் தெரிவித்துள்ளார். தாக்குதலுக்கு உள்ளான வாகனத்தில் சென்றவர்கள் ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதியில் உள்ள தங்கள் உறவினர்களை பாதுகாப்பாக அழைத்து கொண்டு செல்ல திட்டமிட்டிருந்தனர். மேலும் தாக்குதல் நடந்த இடத்தில் மீட்புப் படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர் என அவர் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் குடியிருப்பு பகுதியில் நடந்த துப்பாக்கிச்சூடு: 5 பேர் பலி

**வாஷிங்டன், அக். 01-**

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் நேற்று நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாக துப்பாக்கிச்சூடு கலாச்சாரம் அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் மெஹ்ரஹொர் நகரில் உள்ள ஒரு குடியிருப்பு பகுதியில் நேற்று துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. இந்த துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர்.

குடும்பப்பிரச்சினை காரணமாக இந்த துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. பெண் தனது 2 குழந்தைகள், காதலனுடன் குடியிருப்பு பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் அந்த பெண்ணுக்கும் அவரது காதலனுக்கும் குடும்ப பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அப்போது, இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் காதலன் தான் வைத்திருந்த துப்பாக்கியால் அந்த பெண்ணையும் அவரது 2 குழந்தைகளையும் சுட்டுக் கொன்றுள்ளான்.

துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்டு அந்த வீட்டிற்கு வந்த பக்கத்து வீட்டை சேர்ந்த 2 பேரையும் அந்த நபர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுள்ளார். இந்த துப்பாக்கிச்சூடு குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்த் சென்ற போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை கைது செய்தனர்.

### நடிகர் சிவாஜி கணேசனுக்கு இன்று பிறந்த நாள்:

# சிலைக்கு மாலையணிவித்து முதல்வர் ஸ்டாலின் மரியாதை

**சென்னை, அக். 01-**

சென்னை அடையாறு மணிமண்டபத்தின் உட்பகுதியில் பொதுமக்கள் வெளியில் இருந்து பார்க்கும் வகையில் இடம் மாற்றி வைக்கப்பட்டுள்ள நடிகர் சிவாஜி கணேசனின் பிறந்த நாளான இன்று அவரது சிலைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் மாலையணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு தி.மு.க. ஆட்சியின் போது கடந்த 2006-ம் ஆண்டு மெரினா கடற்கரையில் ஆள் உயர வெண்கல சிலை நிறுவப்பட்டது. காமராஜர் சாலை - ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பில் காந்தி சிலை அமைந்துள்ள பகுதியில் சாலையின் நடுவே இந்த சிலை அமைக்கப்பட்டிருந்தது.

இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக கூறி ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டதையடுத்து கடந்த 2017-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மெரினா கடற்கரை பகுதியில் இருந்து சிவாஜி சிலை அகற்றப்பட்டது.

அதை தொடர்ந்து அப்போதிருந்த அ.தி.மு.க. அரசு சிவாஜி கணேசனுக்கு அடையாறில் மணிமண்டபம் கட்டியது. இந்த மணிமண்டபத்தில் சிவாஜி கணேசனுக்கு வெண்கல சிலை நிறுவப்பட்டது. மேலும் மணிமண்டபத்தில் சிவாஜியின் அரிய புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. மணிமண்டபத்தின் நடுவே சிலையை அமைத்திருந்தனர். வெளியில் இருந்து பார்த்தால் தெரியாத வகையில் சிலை இருந்தது.

இந்த நிலையில் பொதுமக்கள் வெளியில் இருந்தே பார்க்கும் வகையில் மண்டபத்தின் உள்பகுதியிலேயே சாலையை பார்க்கும் வகையில் சிவாஜியின் கம்பீரமான சிலை இடம் மாற்றி வைக்கப்பட்டுள்ளது. இந்த சிலை திறப்பு விழா சிவாஜி பிறந்த நாளான இன்று (அக்டோபர் 1-ம் தேதி) நடைபெறுகிறது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிவாஜி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

# இன்று உலக முதியோர் தினம்: ஜி.கே.வாசன் வாழ்த்து

**சென்னை, அக். 01-**

உலக முதியோர் தினத்தையொட்டி த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் அக்டோபர் 1-ம் தேதி அன்று உலக முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது,

வீடும், நாடும், சமூகமும் உயர்வடைய தன் வாழ்நாள் முழுவதும் உழைத்து ஓய்வெடுக்கும் முதியோர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலே, அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலே, வருடந்தோறும் அக்டோபர் 1-ம் தேதி அன்று உலக முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது.

தான் கற்காத கல்வியையும், அடையாத பதவியையும், சமூகத்தில் அடையாத உயரத்தையும் தன் சந்ததிகள், பெற வேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் உழைத்து, தன் சுய தேவைகளையும், ஆசைகளையும் துறந்து பாடுபட்ட முதியோர்களின் தியாகங்களை போற்றும் விதமாக அவர்களை வணங்குவோம்.

இந்த நல்லநாளில் அவர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும், அன்பையும் பாதுகாப்பையும் அளிப்போம்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# வெள்ள தடுப்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ளுங்கள்: முதல்வருக்கு ஓ. பன்னீர் செல்வம் கோரிக்கை

**சென்னை, அக். 01-**

வடகிழக்கு பருவமழைக் காலத்தின்போது தொடர்ந்து மழைப்பொழிவு ஏற்பட்டால் நிலைமை என்னவாகுமோ என்ற அச்சத்தில் மக்கள் உறைந்து போயுள்ளனர். எனவே வெள்ளத்தடுப்பு பணிகளை போர்க்கால அடிப்படையில் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதல்வருக்கு ஓ. பன்னீர் செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ஓ.பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வடகிழக்கு பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய முதல்வர், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்படக் கூடிய மாவட்டங்களில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நிறைவேற்றப்படுவதாகவும், முக்கியக் கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் இந்த ஆண்டு மழை நீர் தேங்காது என்று ஓரளவு எதிர்பார்ப்பதாகவும் கூறி இருந்தார்.



முதல்வர் ஓரளவு என்று சொல்வது இந்த ஆண்டும் மழை நீர் தேங்குமோ என்ற சந்தேகம் பொதுமக்களிடையே ஏற்பட்டு உள்ளது. இந்தச் சூழ்நிலையில், கடந்த புதனன்று பெய்த ஒரு மணி நேர மழையில் சென்னை மாநகரமே வெள்ளத்தில் மூழ்கியது. மேலும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலுள்ள பேருந்து நிலையங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கான பணிகள் இன்னமும் துவங்கப்படவில்லை.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழைக் காலத்தின்போது தொடர்ந்து மழைப்பொழிவு ஏற்பட்டால் நிலைமை என்னவாகுமோ என்ற அச்சத்தில் மக்கள் உறைந்து போயுள்ளனர். எனவே, முதல்வர் இதில் உடனடியாக தனிக்கவனம் செலுத்தி, வெள்ளத் தடுப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், பருவமழையின் போது, ஆங்காங்கே தோண்டப்பட்டு இருக்கும் பள்ளங்களை சுற்றி வைக்கப்பட்டு இருக்கும் தடுப்புகளை கண்காணிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

## உக்ரைன் பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பது நில அபகரிப்பு நடவடிக்கை

**வாஷிங்டன், அக். 01-**

உக்ரைனில் கைப்பற்றிய நான்கு பகுதிகளை தங்கள் நாட்டுடன் இணைக்கும் திட்டத்தை ரஷ்யா முன்னெடுத்து வருகிறது. உக்ரைனில் ரஷ்யா கைப்பற்றிய பிராந்தியங்களை அதிகாரபூர்வமாக தங்கள் நாட்டுடன் இணைத்து கொள்ள ரஷ்யா முடிவு செய்துள்ளதை நில அபகரிப்பு நடவடிக்கை என்று அமெரிக்கா விமர்சித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க உள்துறை செயலாளர் ஆனடனி பிளிங்கன் கூறுகையில், சர்வதேச சட்டங்களின் படி ரஷ்யாவின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது. உக்ரைனில் ரஷ்ய படைகள் வசமுள்ள லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கெர்சன் மற்றும் ஜாபோர்ஜியா ஆகிய 4 பிராந்தியங்களை அதிகாரபூர்வமாக தன்னுடன் இணைத்து கொள்வதை அமெரிக்கா ஒரு போதும் அங்கீகரிக்காது என்று தெரிவித்தார்.

# ஏஷியன் பெயிண்ட்ஸ் புதிய பிரச்சாரத்தை துவக்குகிறது

**சேலம், அக் 01-**

ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் தங்கள் ஆளுமை மற்றும் விருப்பங்களை பிரதிபலிக்கும் வகையில் தங்கள் வீட்டை அலங்கரிக்க விரும்புகிறார்கள். ஒரு பளபளப்பான பூச்சு நுகர்வோரால் மிகவும் விரும்பப்பட்டாலும், இது பெரும்பாலும் பிரீமியம் மற்றும் கட்டுப்படியாகாததாக கருதப்படுகிறது,

ஏனெனில் மலிவு விலையில் பளபளக்கும் தயாரிப்புகள் பற்றிய விழிப்புணர்வு எதுவும் இல்லை.அந்த எண்ணத்தை உள்வாங்கும் வகையில், ஏஷியன் பெயிண்ட்ஸ் தங்களுடைய மலிவு விலை வண்ணப் பூச்சுகளுக்கான புதிய பிரச்சாரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது - உட்புறச் சுவர்களுக்கு டிராக்டர் ஷைன் மற்றும் வெளிப்புறச் சுவர்களுக்கு ஏஸ் ஷைன்.

இந்த பெயிண்ட்கள் நுகர்வோருக்கு நியாயமான விலையில் நீண்ட கால பிரகாசத்தை வழங்குகின்றன. மூன்று வருட செயல்திறன் உத்தரவாதத்துடன் வீடுகளை மாற்றுவதற்கு கிடைக்கிறது. பெயிண்ட்கள் ஒருவரின் வீட்டிற்கு ஆடம்பரமான தோற்றத்தை சேர்க்கின்றன.

இது குறித்து ஏஷியன் பெயிண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் எம்.டி & சி.இ.ஓ.அமித் சிங்கில் கூறுகையில், வீடுகள் என்பது ஒருவரின் ஆளுமை மற்றும் ரசனையின் பிரதிபலிப்பாகும். ஒவ்வொரு நபரும் தங்கள் சுவர்களுக்கு பெயின்டிங் செய்யும்போது, ஒவ்வொரு நபரும் தங்கள் இடம் எப்படி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை சுருக்கிக் கொள்கிறார்கள்.

ஏஷியன் பெயிண்ட்ஸ் டிராக்டர் மற்றும் ஏஸ் ஷைன் மூலம், ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் தங்கள் சுவர்களுக்கு அதிக செலவு செய்யாமல் ஒரு நேர்த்தியான பிரகாசத்தை சேர்க்க முடியும். மேலும் புதிய பிரச்சாரம் அந்த செய்தியை தடையின்றி தெரிவிக்கிறது.

பண்டிகைகளின் போது, நுகர்வோர் தங்கள் வீடுகளை புதுப்பிக்க முற்படும்போது, எங்களின் செலவு குறைந்த பெயிண்ட் ரேஞ்ச் அந்த வேலையைச் செய்கிறது, அதே நேரத்தில் மிக உயர்ந்த தரத்திலான பளபளப்பை அளிக்கிறது என்று கூறினார்.



மதுரை பழங்காநத்தத்தில் நடந்த அ.தி.மு.க கண்டன பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளருமான செல்லூர் கே. ராஜூ உரையாற்றினார்.

### விலைமதிப்பற்ற உயிர்களை காப்பாற்ற

# மக்கள் ரத்ததானம் செய்ய முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்



**சென்னை, அக். 01-**

விலைமதிப்பற்ற உயிர்களை காப்பாற்றிட பொதுமக்கள் அனைவரும் பெருமளவில் தன்னார்வ ரத்த தானம் செய்திடவும் முன்வர வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தேசிய தன்னார்வ ரத்த தான நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:

ரத்த தானம் மூலம் மதிக்கத்தக்க மனித உயிரை காப்பாற்றுவது புனிதமான செயலாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ ரத்த தான தினமாக கொண்டாடப்படுகிறது.

தன்னார்வ ரத்த தானத்தின் முக்கியத்துவத்தை மக்கள் அனைவரும் அறிந்திடும் வகையில் விழிப்புணர்வை தமிழக அரசு ஏற்படுத்தி வருகிறது. உரிய கால இடைவெளியில் ரத்த தானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி அவர்களின் உடல் நலன் காக்கப்படுகிறது. அரசு ரத்த மையங்கள் மற்றும் தன்னார்வ ரத்த தான முகாம்களில் ரத்த தானம் செய்யலாம். ரத்த மையங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக *e-RaktKosh* என்ற வலைதளம் செயல்பாட்டில் உள்ளது.

பொது மக்கள் இத்தளத்தை பயன்படுத்தி தங்களுக்கு தேவைப்படும் நேரங்களில் எளிதில் ரத்தம் பெற்றுக் கொள்ளலாம். கடந்த ஆண்டு அரசு மற்றும் தனியார் ரத்த மையங்கள் மூலம் 90 சதவீதம் ரத்தம் சேகரிக்கப்பட்டு தன்னார்வ ரத்த தானத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. நடப்பு ஆண்டில் தன்னார்வ ரத்த தானத்தில் தமிழகம் 100 விழுக்காடு இலக்கை எய்திடவும், விலைமதிப்பற்ற உயிர்களை காப்பாற்றிட பொதுமக்கள் அனைவரும் பெருமளவில் தன்னார்வ ரத்த தானம் செய்திடவும் முன்வர வேண்டும். இவ்வாறு அதில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு அனுமதி விவகாரம்:

# திருமாவளவன் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்து ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, அக். 01-**

ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு அனுமதியளித்து பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தாக்கல் செய்த வழக்கை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக ஒத்திவைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் அக்டோபர் 2-ம் தேதி ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புப் ஊர்வலத்திற்கு அனுமதி அளிக்கும்படி பல்வேறு நிபந்தனைகளை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 22-ம் தேதி உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி இளந்திரையன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது திருமாவளவன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், மத நல்லிணக்கம், சட்டம் - ஒழுங்கு பிரச்சினை சம்பந்தப்பட்டுள்ளதால் மறு ஆய்வு கோர உரிமை உள்ளதாக வாதிட்டார்.

மேலும், "பேரணிக்கு அனுமதி கோரியது என்பது உரிமையியல் பிரச்சினை. அதை சம்பந்தப்பட்ட நீதிபதி முன் விசாரணைக்கு பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும். மாறாக, குற்றவியல் வழக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் விசாரணைக்கு உகந்ததல்ல எனக் கூறி அந்த வழக்கில் பிறப்பித்த உத்தரவுகளை மறு ஆய்வு செய்ய வேண்டும்.

காவல் கண்காணிப்பாளரையோ, காவல் ஆணையரையோ எதிர்மனுதாரராக சேர்ப்பதன் மட்டும் உரிமையியல் வழக்கை, குற்றவியல் வழக்காக கருத முடியாது" என்று வாதிட்டார். இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதி, திருமாவளவன் தாக்கல் செய்த மனுவை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

### பாரதிய ஜனதா ஆளும்

# கர்நாடகாவில் தொடங்கியது ராகுலின் 23-ம் நாள் பயணம்

### சித்தராமையா உள்ளிட்டோர் வரவேற்பு

**பெங்களூரு, அக். 01-**



ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமைப் பயணம் (பாரத் ஜோடோ யாத்திரை) 23-வது நாளில் அடியெடுத்து வைத்துள்ளது. முதன்முதலாக பாஜக ஆளும் மாநிலத்தில் ராகுல் நேற்று தனது பயணத்தைத் தொடங்கினார். கர்நாடகா வந்த ராகுல் காந்தியை அம்மாநில முன்னாள் முதல்வர் சித்தராமையா, மாநில எல்லைக்குச் சென்று வரவேற்றார்.

காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி செப்.7-ம் தேதி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலான இந்திய ஒற்றுமை பயணத்தைத் தொடங்கினார். மொத்தம் 150 நாட்களில் 12 மாநிலங்கள் வழியாக 3,500 கி.மீ. தொலைவுக்கு இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படுகிறது.

இதுவரை தமிழகம், கேரளாவில் நடந்து வந்த இந்த யாத்திரை அதன் 23-வது நாளில் கர்நாடகாவை அடைந்துள்ளது. முதல் முறையாக பாஜக ஆளும் ஒரு மாநிலத்தில் நடக்க இருக்கும் யாத்திரைக்காக கர்நாடகா வந்துள்ள ராகுல் காந்தியை மாநில எல்லையில் சென்று அம்மாநில முன்னாள் முதல்வர் சித்தராமையா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் வரவேற்றனர்.

கர்நாடகா காங்கிரஸார் தங்கள் மாநிலத்தில் நடக்க இருக்கும் இந்திய ஒற்றுமை யாத்திரைக்காகவும், ராகுல் காந்தியை வரவேற்பதற்காகவும் பல ஏற்பாடுகள் செய்துள்ள நிலையில், கர்நாடக காங்கிரஸில் யாத்திரை முக்கியப் பங்கு வகிக்கும் என்று கூறப்படுகிறது. அரசியல் விமர்சகர் சந்தீப் சாஸ்திரி, "இந்த யாத்திரை காங்கிரஸ் இயக்கத்தின் இருப்பை மாநிலத்திலும் தேசிய அளவிலும் உறுதி செய்யும்" என்று கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த யாத்திரை, கர்நாடகாவில் காங்கிரஸ் ஒரு வலிமையான எதிர்க்கட்சி என்ற பெயரை தக்கவைத்துக் கொள்ள மிக முக்கியமான பங்கு வகிக்கும். மேலும், முன்னாள் முதல்வர் சித்தராமையா, மாநில காங்கிரஸ் காரிய கமிட்டி தலைவர் டி.கே.சிவக்குமார் இருவருக்கும் தங்களின் வலிமையை நிரூபிக்க உதவும் எனத் தெரிகிறது. யாத்திரை நிகழ்ச்சிகளை நிர்வகிக்க மாநில காங்கிரஸ் 18 குழுக்களை அமைத்துள்ளது. கட்சியின் மாநிலத் தலைவர் டி.கே.சிவக்குமார் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும், 5000 பேர் யாத்திரையில் பங்கேற்க செய்யவேண்டும் என்று கட்சி எம்எல்ஏக்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மாநிலத்தில் பாரத் ஜோடோ யாத்திரையை வரவேற்கும் வகையில், ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர்களை வரவேற்று டிகள் கிழிக்கப்பட்டுள்ளன ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் மாநில முதல்வர் பசவராஜ் பொம்மையிடம் ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை குறித்து கேட்ட போது, "ராகுல் கர்நாடகாவிற்கு வரட்டும் போகட்டும். கடந்த 2019 தேர்தலில் அவர் வந்து சென்ற இடங்களில் எல்லாம் தாமரை மலர்ந்தது" என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### 3-வது கட்ட கலந்தாய்வு 13-ல் தொடங்கும்:

# இம்மாத இறுதியில் பி.இ. முதலாமாண்டு வகுப்புகள் துவக்கம்: அமைச்சர் பொன்முடி

**சென்னை, அக். 01-**

பொறியியல் படிப்புக் கான 3-வது கட்ட கலந்தாய்வு வரும் 13-ம் தேதி தொடங்கும் என்றும், இம்மாத இறுதியில் பி.இ. முதலாமாண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடங்கும் என்றும் அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி கூறியதாவது:

பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான 2- சுற்று கலந்தாய்வு நிறைவு பெற்றுள்ளது. வரும் 13-ம் தேதி 3-வது கட்ட மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு தொடங்கவுள்ளது. பி.ஆர்க் மாணவர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியல் வரும் 5-ம் தேதி வெளியிடப்படும்.

பொறியியல் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் 4-ம் சுற்று முடிந்து அக்டோபர் இறுதியில் தொடங்கும். நீட் தேர்வு முடிவு தாமதமாக வந்ததால் கலந்தாய்வு தள்ளிப்போனது. கடந்த வருடங்களை போல இல்லாமல் அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் காலி இடங்கள் இருக்காது. அனைத்து இடங்களும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

12- ம் வகுப்பு துணைத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்கள், நடப்பு கல்வியாண்டிலேயே கல்லூரிகளில் சேர்ப்பதற்கு, அந்தந்த கல்லூரி முதல்வர்கள் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சுற்றறிக்கை அனுப்பப்படும். மேலும், பேருந்து கட்டணம் பற்றி விளையாட்டாக பேசியதை இவ்வளவு பெரிதுபடுத்த வேண்டியதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

### கோயில்களில் ஊழியர்கள் நியமனத்தை எதிர்த்த வழக்கு:

# தமிழக அரசு விளக்கமளிக்க சுப்ரீம் கோர்ட் நோட்டீஸ்

**புதுடெல்லி, அக். 01-**

தமிழக கோயில்களை நிர்வகிக்க அரசு ஊழியர்களை நியமனம் செய்வதற்கு தடை விதிக்க கோரி தொடரப்பட்ட மேல் முறையீட்டு வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

டி.ஆர்.ரமேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழக கோயில்களுக்கு ஊழியர்களை நியமிக்க அறங்காவலர்களுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. அறநிலையத் துறை ஆணையருக்கு அதிகாரமில்லை. தமிழகம் முழுவதும் உள்ள 44 ஆயிரம் கோயில்களில், 19 ஆயிரம் கோயில்களில் பரம்பரை அறங்காவலர்கள் இல்லை.எனவே அறங்காவலர் இல்லாத நிலையில், உரிய தகுதி உள்ளவர்களை கோயில் ஊழியர்களாக நியமனம் செய்ய வேண்டும்.

ஆனால் இதற்கு மாறாக அரசு ஊழியர்களை கோயில் பணிகளுக்கு நியமனம் செய்துள்ளனர்.எனவே தகுதியில்லாமல் நியமனம் செய்யப்பட்டவர்களை உடனடியாக பணி நீக்கம் செய்ய வேண்டும். அவர்களுக்கு கோயில் வருமானத்தில் இருந்து வழங்கப்பட்ட ஊதியத்தை திரும்ப கோயிலுக்கு செலுத்த உத்தரவிட வேண்டும்" என கோரி வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம்,"கோயில் நிர்வாகத்தை கவனிக்க ஏதுவாக ஊழியர்களை நியமிக்க அறநிலையத்துறை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. கோயில் நலனை கருதி அயல்பணியில் அறநிலையத்துறை ஊழியர்களை தற்காலிகமாக நியமித்ததில் எந்த சட்டவிரோதமும் இல்லை.

அறங்காவலர்கள் நியமனத்தை உயர் நீதிமன்றம் கண்காணிக்கும் என்றும், விரைவில் அறங்காவலர்கள் நியமிக்கப்படுவர் என நம்புவதாகவும் கூற வழக்கை முடித்து வைத்து" உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து டி.ஆர்.ரமேஷ் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி டி.ஓய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த மனு தொடர்பாக 6 வாரத்தில் தமிழக அரசு பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டனர். மேலும், அரசு பதில்மனு தாக்கல் செய்த, அடுத்த 3 வாரத்தில், மனுதாரர் தரப்பில் விளக்க மனு தாக்கல் செய்ய மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.

# தமிழ்நாடு வேளாண் பல்கலை. தரவரிசை பட்டியல் வெளியீடு

### 7 மாணவர்கள் முதலிடம்

**கோவை, அக். 01-**

தமிழ்நாடு வேளாண் பல்கலை தரவரிசை பட்டியல் நேற்று வெளியிடப்பட்ட நிலையில், ஏழு மாணவர்கள், 200-க்கு 200 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்தனர்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலையில், 12 பி.எஸ்சி., பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. நடப்பு கல்வியாண்டில், மாணவர் சேர்க்கைக்கு, 6,980 இடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதற்காக, ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் கடந்த ஜூன் 28-ம் தேதி முதல் ஆகஸ்ட் 20-ம் தேதி வரை பெறப்பட்டன.

இந்நிலையில், நேற்று பல்கலை வளாகத்தில் பல்கலை. துணைவேந்தர் கீதாலட்சுமி தரவரிசைப்பட்டியலை வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

அரசு வேளாண் கல்லூரிகளில் ஒற்றை சாளர முறையில் 2,567 இடங்கள் நிரப்பப்பட உள்ளன. இணைப்புக் கல்லூரிகளில், அரசு இட ஒதுக்கீட்டில் ஒற்றைச் சாளர முறையில், 2,868 இடங்களும், நிர்வாக இட ஒதுக்கீட்டின் மூலம், 1,545 இடங்கள் என மொத்தம், 4,413 இடங்களும், தொழில்கல்வி பயின்ற மாணவர்களுக்கு 247 இடங்களும், மாற்றுத்திறனாளிகளுக்கு 120 இடங்களும், அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு 408 இடங்களும், முன்னாள் ராணுவத்தினர் வாரிசுகள், விளையாட்டு வீரர்களுக்கு தலா, 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சிறப்பு இடஒதுக்கீட்டின் கீழ், 391 மாணவர்கள், அரசு பள்ளியில் பயின்ற 7,773 மாணவர்களும், மாற்றுத்திறனாளிகள் பிரிவில், 144, தொழிற்கல்வி பிரிவில் 1,849, விளையாட்டு வீரர்கள் பிரிவில், 808 என, மொத்தம், 39 ஆயிரத்து, 489 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில், 15 ஆயிரத்து, 111 மாணவர்கள், 24 ஆயிரத்து, 378 மாணவியர் அடங்குவர். மொத்த விண்ணப்பதாரர்களில், பொதுப்பிரிவு, 1,226, பிற்பட்ட வகுப்பு, 13 ஆயிரத்து, 610, மிகவும் பிற்படுத்தப்பட்டோர், 11 ஆயிரத்து, 915, பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர் பிரிவில், 794, பட்டியல் இனத்தவர் பிரிவில், 10 ஆயிரத்து 002, அருந்ததியர் பிரிவில், 1,346, பழங்குடியினர் பிரிவில், 596 மாணவர்கள் விண்ணப்பித்து உள்ளனர்.

இந்நிலையில், தரவரிசைப் பட்டியலில், ஈரோடு, புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த தலா இருவர், சேலம், ராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களை சேர்ந்த தலா ஒருவர் என மொத்தம், ஏழு பேர் 200-க்கு, 200 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பிடித்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக, 199.5 மதிப்பெண் 14 பேரும், 199 மதிப்பெண்களை மூவரும் பிடித்துள்ளனர். மேலும், 195 மதிப்பெண்களுக்கு மேல், 513 பேர் எடுத்து உள்ளனர். கடந்தாண்டு, 161 பேர் 195 மதிப்பெண்களுக்கு மேல் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு அரசு கல்லூரிகளில் கட்ஆப் 185.5 மதிப்பெண் வரை பெற்றவர்கள், தனியார் கல்லூரிகளில், 179 வரை கட்ஆப் பெற்றவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டன. தொழில்நுட்ப பாடப்பிரிவுகளில், சராசரியாக 181 மதிப்பெண் வரை கட்ஆப் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மீடியத்தில் கடந்தாண்டு இரண்டு பிரிவுகளில் தலா 40 இடங்கள் இருந்த நிலையில், தற்போது, 10 இடங்கள் அதிகரிக்கப்பட்டு 50 இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. மருத்துவ படிப்புக்கான முதல் கட்ட கவுன்சிலிங் முடிந்த பிறகு வேளாண் பல்கலை. கவுன்சிலிங் துவங்கும். ஆன்லைன் முறையில் கவுன்சிலிங் நடைபெறும்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கவுன்சிலிங் தொடர்பாக யூடியூப் மூலம் தவறான தகவல் வெளியிட்டு வரும் நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது போல் தவறான தகவல் பரப்பும் நபர்கள் மீது மிக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பல்கலை.யின் அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டும் மாணவர்கள் நம்ப வேண்டும். யூடியூப் சேனல்களில் வரும் தகவல்களை நம்ப வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

# முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மீதான நில அபகரிப்பு வழக்கு ரத்து

### சென்னை ஐகோர்ட்டு உத்தரவு

**சென்னை, அக். 01-**

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மீதான நில அபகரிப்பு வழக்கை ரத்து செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

சென்னை துரைப்பாக்கத்தில் 8 கிரவுண்ட் நில உரிமை தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் மருமகனான நவீன்குமார், அவரது சகோதரர் மகேஷ்குமார் என்பவருக்கும் பிரச்சினை இருந்து வந்தது. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், தனது செல்வாக்கை பயன்படுத்தி அடியாட்கள் மூலம் மிரட்டி நிலத்தை அபகரித்து கொண்டதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் மகேஷ் குமார் புகார் அளித்திருந்தார்.

இந்தப் புகாரின் அடிப்படையில் ஜெயக்குமார், அவரது மருமகன் நவீன்குமார் மற்றும் மகள் ஜெயப்பிரியா ஆகியோர் மீது கொலை மிரட்டல், சதித்திட்டம் உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த நிலையில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் தாக்கல் செய்திருந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், மருமகன் நவீன்குமார் மற்றும் மகள் ஜெயப்பிரியா ஆகியோர் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் சென்னை ஐகோர்ட்டு நீதிபதி இளந்திரையன் நேற்று தீர்ப்பு அளித்தார். அதில், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தரப்பு வாதங்களை ஏற்றுக் கொண்டு அவர் மீதான வழக்கை நீதிபதி ரத்து செய்தார். இது போன்று மருமகன் நவீன்குமார், மகள் ஜெயப்பிரியா ஆகியோர் மீதான நில அபகரிப்பு வழக்கையும் நீதிபதி இளந்திரையன் ரத்து செய்து உத்தரவிட்டார்.

### தொடர் விடுமுறை எதிரொலி:

# ரயில், பஸ் நிலையங்களில் அலைமோதிய மக்கள் கூட்டம்

**சென்னை, அக். 01-**



சனி, ஞாயிறு, சரஸ்வதி பூஜை, விஜய தசமி என தொடர் விடுமுறை வந்ததன் எதிரொலியாக பஸ், ரயில்களில் மக்கள் கூட்டம் நேற்று அதிகமாக காணப்பட்டது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்கள் சென்னையில் வசித்து வருகிறார்கள். இவர்கள் ஒவ்வொரு தொடர் விடுமுறையின் போதும் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம்.

அந்த வகையில் ஆயுத பூஜை, விஜயதசமி ஆகிய பண்டிகைகள் வரும் 4, 5-ம் தேதிகளில் கொண்டாடப்படுகின்றன. இதற்காக ஊருக்குச் செல்ல விரும்பும் பெருமளவிலான அரசு ஊழியர்கள், மாணவர்கள், உள்ளிட்டோர், இடையில் இருக்கும் திங்கள் கிழமை ஒரு நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு, நேற்று முதலே பயணிக்கத் தொடங்கி விட்டனர்.

அதே நேரத்தில் பொது மக்கள் சிரமமின்றி பயணிக்கும் வகையில் நேற்று முதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது. அதன் படி, சென்னையிலிருந்து நாள்தோறும் இயக்கப்படும் 2,100 பேருந்து களுடன், 2,050 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இதே போல் பிற ஊர்களிலிருந்து மற்ற பகுதிகளுக்கு 1,650 சிறப்புப் பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடைசி நேர பயணத்தால் நேற்று முன்தினம் மாலை முதல் கோயம்பேடு பஸ் நிலையம், சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களில் பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

### தி.மு.க. தலைவர், பொதுச்செயலாளர் பதவிக்கு

# 7-ம் தேதி வேட்பு மனுக்கள் பெறப்படும்: துரைமுருகன்

**சென்னை, அக். 01-**

தி.மு.க. தலைவர் மற்றும் பொது செயலாளர் பதவிக்கு வரும் 7-ம் தேதி வேட்பு மனுக்கள் பெறப்படும் என்று துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தி.மு.க. 15-வது பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தகுதியுள்ள ஒன்றிய,நகர, நகரிய பேரூர், பகுதி செயலாளர்கள், மாவட்ட, மாநகர செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அடங்கிய புதிய பொதுக்குழுக் கூட்டம் வருகிற 9-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு சென்னை, அமைந்தகரை, பச்சையப்பன் கல்லூரி எதிரில் உள்ள செயின்ட் ஜார்ஜ் பள்ளி விங்ஸ் கன்வென்ஷன் சென்டரில் நடைபெறும்.

அப்போது தி.மு.க. தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் நான்கு தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெறும். மேற்கண்ட பொறுப்புகளுக்கான வேட்பு மனுக்கள் 7-10-2022 வெள்ளிக் கிழமை அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.


இப்பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர் வேட்பு மனுக் கட்டணமாக ரூ.50 ஆயிரம் அளித்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் நான்கு தணிக்கைக் குழு உறுப்பினர்கள் ஆகிய பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர்களைப் பொதுக் குழு உறுப்பினர்கள் (தலைமைச் செயற்குழு உறுப்பினர் உட்பட) 5 பேர் முன் மொழிய, 5 பேர் வழி மொழிய வேண்டும். அனைத்து நடைமுறைகளும் கட்சித் தேர்தல் விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

### கோமுகி நதி அணையில் இருந்து இன்று முதல் நீர் திறக்க உத்தரவு

**சென்னை, அக். 01-**


கள்ளக்குறிச்சி மாவட்டம் கோமுகி நதி அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம், கோமுகி நதி அணையிலிருந்து இன்று 01.10.2022 முதல் 27 நாட்களுக்கு பழைய மற்றும் புதிய பாசனப் பரப்புகளுக்கு தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 10860 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க...




ஓசி பேருந்து பயணம் என விளையாட்டாக பேசியதை இவ்வளவு பெரிதுபடுத்த வேண்டிய தேவையில்லை. கீழே மக்கள் பேசியதை நான் கலோக்கியலாக சொன்னதைத் தவறாக புரிந்து கொண்டனர்.

- அமைச்சர் பொன்முடி



ஆன்லைன் சூதாட்டத்தால் கடந்த 6 ஆண்டுகளில் 80 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கடந்த ஓராண்டில் மட்டும் 28 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழக அமைச்சரவை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்தை, தாமதமின்றி நிறைவேற்றி ஆளுநர் சட்டமாக்க வேண்டும்.

- அன்புமணி



தரமற்ற பொருளை தந்த அதே நிறுவனத்திற்கு சொற்பத் தொகையை அபராதம் விதித்து, மீண்டும் அதே நிறுவனத்திடம் பொருட்களை சப்ளை செய்ய ஆர்டர் தருவது, சந்தேகத்திற்கு இடமில்லாத தவறு நடப்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த ஊழல் வெளிச்சம் தான் விடியல் போல.

- அண்ணாமலை



வெளிநாட்டு பயணிகளை மேலும் ஈர்க்கும் வகையில் மாமல்லபுரத்தில் சுற்றுலா கட்டமைப்புகளை மேலும் மேம்படுத்த வேண்டும். தமிழகத்தின் தொல்லியல் சிறப்பிடங்களை இணைக்கும் வகையிலான தொல்லியல் சுற்றுலா திட்டத்தை தமிழக அரசு உருவாக்கி செயல்படுத்த வேண்டும்.

- ராமதாஸ்

# மதுரை மாவட்டத்தில் பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்தின் கீழ் 13 ஊராட்சி ஒன்றியங்களில் 6.50 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன

## கலெக்டர் அனீஷ்சேகர் செய்தியாளர்கள் பயணத்தில் தகவல்



மதுரை.அக்.01.

மதுரை மாவட்டம், கிழக்கு ஊராட்சி ஒன்றியம், யா.புதுப்பட்டி ஊராட்சியில் "பசுமை தமிழகம்" திட்டத்தின் கீழ் அதிகளவில் மரக்கன்றுகள் நடும் பணிகளை மாவட்ட கலெக்டர் மரு. எஸ்.அனீஷ் சேகர் செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்தார்.

மேலும் மாவட்ட கலெக்டர் மரு.எஸ்.அனீஷ் சேகர் தெரிவிக்கையில்-

தமிழகத்தின் வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கில் நடப்பாண்டில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை பள்ளி மாணவர்களுடன் உள்ளூர் நாட்டு மரக்கன்றுகளை நட்டு, "பசுமை தமிழ்நாடு இயக்கத்தை" தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்கள்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளையும், இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளவும், அப்பேரிடர்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் திறன் கொண்டதாகவும் திகழ்வதால், அதிக அளவிலான நாட்டு மரங்கள் நடுவது மற்றும் ஊக்குவிப்பது பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும். அடுத்த பத்தாண்டு காலத்தில் நகர்ப்புற பகுதிகள், விவசாயப் பண்ணைகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், தொழிற்சாலைகள், தொழிற்சாலைகளுக்கு சொந்தமான நிலங்கள், ஏரிக்கரைகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள், ஆற்றுப் படுகைகள் மற்றும் பிற பொது நிலங்களில் பொருளாதாரம் மற்றும் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் மர வகைகளை நட்டு பராமரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பசுமை தமிழ்நாடு இயக்கத்திற்காக தமிழ்நாடு மாநில அளவில் வனத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நாற்றங்கால்கள் போன்றவற்றின் மூலமாக 2.80 கோடி மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டுள்ளன. விவசாயிகளை ஊக்குவித்திடும் வகையில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் உயர் ரக மரங்களான சந்தனம், செம்மரம் மற்றும் ஈட்டி மரம் போன்ற மரங்களை வளர்க்க அரசின் மூலம் அறிவுறுத்தப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளை பசுமையாக்கவும் சூழலைப் பாதுகாக்கவும் , பெருவாரியான மரக்கன்றுகள் நடுதல் (Massive Tree Plantation) மற்றும் ஊரகச் சாலைகளின் இருமருங்கிலும் மரக்கன்றுகள் நடுதல் பணிகளை மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் 13 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா 50,000 மரக்கன்றுகள் நடவு செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, மொத்தம் 6.50 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், இயற்கை வளங்களை பாதுகாத்து சுற்றுப்புறத் தூய்மையை மேம்படுத்திடும் நோக்கில் பிளாஸ்டிக் பைகள் பயன்பாட்டை முற்றிலும் தவிர்த்திட பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக "மீண்டும் மஞ்சள் பை", "நம்ம ஊரு சூப்பர்" போன்ற பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆகஸ்ட் 20-ஆம் தேதி முதல் அக்டோபர் 02-ஆம் தேதி வரை என திட்டமிடப்பட்டு, மதுரை மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 420 கிராம ஊராட்சிகளில் "நம்ம ஊரு சூப்பர்" திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக 1. பொது இடங்கள், பள்ளிகள், அங்கன்வடிகள், நீர்நிலைகள், சந்தைப்பகுதிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் ஒட்டு மொத்த தூய்மைப்பணியை உறுதி செய்திட பெருமளவில் சுத்தம் செய்யும் பணிகள் 2. பள்ளிகள் கல்லுரிகளில் உள்ள பேராசியர்கள், ஆசியர்கள் மூலம் மாணவ, மாணவிகளுக்கு குடிநீர், சுகாதாரம், திட, திரவக் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பிரசார இயக்கம் 3.மகளிர் சுகாதார குழு, சுகாதார ஊக்குநர், பிற உறுப்பினர்களைக் கொண்ட தனிநபர் கழிப்பறை உபயோகித்தல், குப்பைகளை மக்கும், மக்காத 'குப்பைகளாக தரம் பிரித்து வழங்குவது குறித்து விழிப்புணர்வு 4.நெகிழிகளால் (பிளாஸ்டிக்) ஏற்படும் தீமைகள், நெகிழிகளுக்கு மாற்றாக துணிப்பைகள் பயன்படுத்துவது, மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்தும் இயக்கம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு 5.புறம்போக்கு நிலங்களில் மரக்கன்றுகள் நடுதல், பள்ளிகள், அங்கன்வாடிகளில் தோட்டம் அமைத்தல், வீடுகளில் ஊட்டச்சத்து மிகுந்த காய்கறி தோட்டம் அமைத்தல் உள்ளிட்ட 5 அடிப்படை தகவல்களை முன்னிருத்தி "நம்ம ஊரு சூப்பரு" என்ற திட்டம் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட மாவட்ட கலெக்டர் மரு. எஸ்.அனீஷ் சேகர் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சுற்றுப்பயண ஆய்வின் போது கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.சரவணன், உட்பட பலர் உடனிருந்தார்கள்.

# புலியூர் நத்தத்தில் இன்று மின்தடை

ஒட்டன்சத்திரம்.அக்.1.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் புலியூர்நத்தம்22.கே.வி.மின் பாதையில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதால்

கே. அத்திக்கோம்பை ,பழைய மாட்டுச்சந்தை, பொதிகை நகர், நாகணம்பட்டிசித்தர்கோவில்பகுதி, குமாரசாமிகவுண்டன்புதூர், புதுகாளஞ்சிபட்டி, பழையகாளஞ்சிபட்டி ,வெரியப்பூர், பெயில் நாயக்கன்பட்டி, வடக்குஅத்திக்கோம்பை ,கே. கல்லுப்பட்டி ,தேவசின்னாம்பட்டி, கேதையுறும்பு, சட்டையப்பனூர், முத்துநாயக்கன்பட்டி, புலியூர்நத்தம், பி.என் .கல்லுப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இன்று1.09.2022 காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை மின் வினியோகம் இருக்காது என உதவி செயற்பொறியாளர் மணிகண்டன் தெரிவித்துள்ளார்.



மதுரை பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் நிர்வாக குழு கூட்டம் அதன் தலைவர் வில்லாபுரம் ஜெ.ராஜா தலைமையில் நடைபெற்றது.இதில் இணை பதிவாளர் பிரியதர்ஷினி, பொது மேலாளர் சுந்தரமூர்த்தி, கணக்கு அலுவலர் பத்மபிரியா மற்றும் இயக்குனர்கள் ஜெயசீலன், ஆர்.பாஸ்கரன், ஜெ.மாணிக்கம், ஏ.பார்த்திபன், பி.கே.எம். மாரிமுத்து, ராணிநல்லுச்சாமி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் தொழிற்பயிற்சி

விருதுநகர் அக் 1.

விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மேகநாத ரெட்டி அறிக்கையில் கூறியதாவது. முன்னாள் படை வீரர்களுக்கு வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் தொழிற்பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதில் அலைபேசி பழுது நீக்குதல், கார் மெக்கானிக், குளிர் சாதன பெட்டி பராமரிப்பு, எலக்ட்ரீசியன், பிளமிங், ஓட்டுனர் பயிற்சி, பேட்டரி பைக் பழுதுபார்த்தல் உள்ளிட்ட தொழில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளனர். விருப்பமுள்ள முன்னாள் படை வீரர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் முன்னாள் படை வீரர் நல உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகி பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம் என்று அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# நத்தத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம்



நத்தம், அக், 1

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தாலுகா அலுவலக வளாகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் நடந்தது. முகாமை தாசில்தார் சுகந்தி தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன்,தனி தாசில்தார் லதா, மண்டல துணை வட்டாட்சியர் அண்ணாமலை, வருவாய் ஆய்வாளர்கள் செந்தில்குமார், ரஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் நத்தம் வட்டார அளவில் இருந்து 200-க்கும் மேற்பட்ட மனுக்கள் வரப்பெற்றன. இதில் அரசு தற்போது வழங்ககூடிய உதவித் தொகை ஆயிரத்தை உயர்த்தி வழங்க வேண்டி பெரும்பாலான மனுக்கள் வரப்பெற்றிருந்தது. மேலும் சிறு தொழில்கள் தொடங்குவதற்கும், ஆடு, மாடுகள் இலவசமாக வழங்குவதற்கும் மற்றும் பல்வேறு மனுக்களை மாற்றுத்திறனாளிகள் வழங்கினர்.தவிர புதிய மாற்றுத்திறனாளிகள் அதற்கான ஆவணங்களை சமர்பித்து மருத்துவ குழுவினரால் பரிசோதனை செய்யப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.இந்த முகாம் மூலம் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றனர்.

# மகிளா சக்தி கேந்திரா திட்டத்தில் சேர்ந்து பெரிய சக்தியாக திகழ்ந்திட கலெக்டர் வேண்டுகோள்




ராமநாதபுரம்,அக்.1-

மகிளா சக்தி கேந்திரா திட்டத்தில் சேர்ந்து மக்கள் மத்தியில் மிகப்பெரிய சக்தியாக திகழ வேண்டும் என்று மாணவ மாணவியருக்கு ராமநாதபுரம் கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராமநாதபுரம், முகமது சதக் தஸ்தகிர் கல்லூரியில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மூலம் மகிளா சக்தி கேந்திரா மாணவ, மாணவியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு பாராட்டு சான்று வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் தலைமையேற்று பேசியதாவது:-மகிளா சக்தி கேந்திரா திட்டம் என்பது மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு எடுத்து செல்வதாகும்.

பொதுவாக ஆண்கள், பெண்கள் இருவரும் திறமையானவர்கள், ஆனாலும் பெண்களுக்கு சக்தி அதிகம், அவர்கள் நினைத்தால் எதையும் எளிதாகவும், பொறுமையாகவும், புத்திசாலித்தனமாகவும் கையாண்டு வெற்றி பெறுவார்கள். ஆனால் பெண்கள் அவ்வளவு சீக்கிரமாக முன் வருவதில்லை, அவ்வாறு இருக்கக்கூடாது பெண்கள் நிர்வாகத் திறமை உள்ளவர்கள். இதற்கு எடுத்துக்காட்டாக தற்பொழுது தமிழக அரசு பெண்களுக்கு ஐம்பது சதவீகிதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு வழங்கும் அதிக அளவில் உள்ளாட்சி அமைப்புகளில் பதிவிகளில் இருந்து வருகின்றனர், காரணம் அவர்களிடம் மனவலிமையும் தன்னம்பிக்கையும் ஆண்களை விட அதிகம் என்பதால் அவர்கள் ஜெயித்துக் காட்டுவார்கள். இத்தகைய சக்தி வாய்ந்த நீங்கள் பொறுப்பிற்கு வரும் போது உங்களால் முடிந்த திட்டங்களை செயல்படுத்தி மக்களின் வளர்ச்சிக்கு வழி காட்ட வேண்டும். இப்படிப்பட்ட காலகட்டங்களில் ஆண்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயல் பட வைக்க வேண்டும். பொதுவாக பெண்கள் முன்னேற்றம் கண்டால் அந்த குடும்பம் மட்டுமல்ல உறவினர்களும் பயன்பெறுவார்கள், பெற்ற கடனை திரும்ப முறையாக செலுத்தும் குணம் பெண்களுக்கு அதிகம்.

அத்தகைய சக்தி கொண்ட பெண்களாகிய நீங்கள் உங்களின் சத்திய வெளிப்படுத்தி முன்னேற்றம் காண உறுதுணையாக இருந்திட வேண்டும். இத்திட்டத்தில் பங்கேற்றுள்ள நீங்கள் இதுதான் ஆரம்பம். இதன் மூலம் என்னற்ற செயல்களை செய்து மக்களின் வாழ்விற்கும் மாற்றம் காணும் முகவர்களாக இருந்திட வேண்டும்.

உங்களின் பணியை வருங்கால தலைமுறையினர் தொடரும் வகையில் செயல்பட்டு அடித்தட்டு மக்களுக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கும், ஊரகப் பகுதியின் வளர்ச்சிக்கும் அனைவரும் உயர்கல்வி பெறுவதற்கும், குழந்தைகளையும், பெண்களையும் பாதுகாத்துவதற்காகவும் விழிப்புணர்வுகளையும் மேற்கொண்டு உறுதுணையாக இருந்திட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து மகிளா சக்தி கேந்திரா திட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட 1050 மாணவ, மாணவிகள் மற்றும் தன்னார்வர்களுக்கு கலெக்டர் பாராட்டுச்சான்று மற்றும் நினைவு பரிசு வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் உன்னிகிருஷ்ணன், மாவட்ட சமூக நல அலுவலர் சாந்தி, மகிளா சக்தி கேந்திரா திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மங்கையர்க்கரசி, மாலதி, அஜிதா, ரோட்டரி சங்க தலைவர் சண்முகசுந்தரம், ரோட்டரி சங்க துணை ஆளுநர் செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நூலகர் தின போட்டிகள் ரமணாஸ் கல்லூரி சாதனை

அருப்புக்கோட்டை அக் 1.

இந்திய தேசிய நூலக தினத்தை முன்னிட்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான பல்வேறு போட்டிகள் விருதுநகர் செந்தில்குமார் நாடார் கலை கல்லூரியில் நடைபெற்றது. இதில் ரமணாஸ் பெண்கள் கலை அறிவியல் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் மாணவிகள் பிரின்சி, ஸ்வேதா ,கார்த்திக் பிரியா ,கோபிகா, மகாலட்சுமி, சுரேகா, ரிபாயா ,அபிநயா ஆகியோர் பல்வேறு போட்டிகளில் முதல் பரிசினை வென்று சாதனை படைத்தனர். ஆனந்தி, தேவகி, லோகேஸ்வரி மூன்றாம் பரிசினை பெற்றனர். மாணவிகள் ஒட்டுமொத்த வெற்றி கேடயத்தையும் வென்றனர். வெற்றி பெற்ற மாணவிகளை கல்லூரி செயலாளர்கள் இளங்கோவன், கல்லூரி குழு சேர்மன் ராமச்சந்திரன், பிஎட் கல்லூரி செயலாளர் சங்கரநாராயணன், இயக்குனர் பாரதி முருகன், முதல்வர் டாக்டர் கதிர் காமு, போக்குவரத்து செயலர் விக்னேஷ், கல்லூரி டீன்னதில்லை நடராஜன் ஆகியோர் பாராட்டினர்.

# டெக்னோ பாப் 6 புரோ 5000 எம்.ஏ.எச். பேட்டரியுடன் அமேஸான் இந்திய பெருவிழா விற்பனையில் ரூ.6,099 மட்டுமே

கோவை, அக் 01-

டெக்னோ மொபைல், டிரான்ஸன் இன்டியாவின் பிரிமீயம் ஸ்மார்ட் போன் பிராண்ட், 8 ஆயிரம் ரூபாய்க்கும் கீழ் உள்ள மொபைல் போனை அறிமுகம் செய்துள்ளது. டெக்னோ பாப் 6 புரோ விலை 6099 மட்டுமே. ஒவ்வொரு காலாண்டிலும் 10 லட்சம் பேர் முதல் முதலாக ஸ்மார்ட் போன் வாங்கும் சந்தை உள்ளதாக இந்தியா முன்னுரிமைச் சந்தையாக உள்ளது. டெக்னோ பாப் தொடரானது, புதியதாக மொபைல் போன் வாங்குவோருக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. சிறந்த மொபைல் போன் காமிரா, செயல் திறன், நம்பகத்தன்மை கொண்ட பேட்டரி, பெரிய அளவிலான டிஸ்ப்ளே திரை, நியாயமான, போட்டி விலையை கொண்டதாகவும் உள்ளது. பாப் 6 புரோ, 6.56 எச்டி பிளஸ் டாட் நோட்ச் டிஸ்ப்ளே ஆழ்ந்த பார்வை அனுபவத்தை தரும். வலிமை வாய்ந்த 5000 எம்எச்ஏ பேட்டரி, 42 நாள் நிலைத்தன்மை நேரத்தை கொண்டது. அழகிய 8 எம்.பி. இரட்டை காமிரா, தரமான, பலவிதமான தொழில்நுட்பமிக்க படங்களைத் தரும். இது குறித்து தலைமை செயல் அதிகாரி அரிஜீத் தலபத்ரா கூறுகையில், மாறி வரும் அதிகவேக இன்டர்நெட் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் உயர்தமான ஆரம்ப நிலை கருவிகளும் தேவைப்படுகின்றன. குறிப்பாக, 3ம் நிலை நகரங்கள் மற்றும் பிற நகரங்களுக்கு இதன் தேவை அதிகமாக உள்ளது. பாப் தொடரின் போர்ட்போலியோ 5 ஆயிரம் ரூபாய் முதல் 8 ஆயிரம் ரூபாய்க்குள் உள்ள இந்திய ஸ்மோர்ட் போனை வாடிக்கையாளர்கள் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர். இந்த வகையில் விற்பனையில் 3ம் இடத்தை பிடித்துள்ளோம். விவிட் 6.56 இன்ச் டாட் நோட்ச் டிஸ்ப்ளே, ஒளிர்வான வண்ணம், இரட்டை வோல்டி இணைப்பு, ஏஐ கேமரா, இவற்றுடன் 5000 எம்ஏஎச் பேட்டரி போன்றவை இதன் சிறப்பம்சங்கள் என்று கூறினார்..டெக்னோ பாப் 6 புரோ, 6099 விலையில் அமெசான்.இன் இணையத்தளத்தில் விற்பனையை துவக்கியுள்ளது. இதனுடன், வாடிக்கையாளர்கள் எஸ்பிஐ வங்கி அட்டையை பயன்படுத்தி 10 சதம் தள்ளுபடியையும் பெறலாம்.

# எக்ஸான் மொபில் லூப்ரிகண்ட்ஸ் 'விக்ரம் வேதா' திரைப்படத்துடன் கைகோர்த்துள்ளது

திருச்சி, அக் 01-

இந்தியாவின் முன்னணி எஞ்சின் ஆயில் பிராண்டான மொபில் (Mobil), செப்டம்பர் 30 ஆம் தேதி உலகம் முழுவதும் 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் வெளியிடப்படவுள்ள மிகவும் எதிர்பார்பிற்குள்ளாகியுள்ள ஆக்ஷன் திரில்லர் திரைப்படம் 'விக்ரம் வேதா' உடன் கைகோர்த்துள்ளது. ஹிருத்திக் ரோஷன், சைஃப் அலி கான் மற்றும் ராதிகா ஆப்தே ஆகியோர் நடித்துள்ள இந்த மிகுந்த எதிர்பார்பிற்குள்ளாகியுள்ள படத்துடனான அதன் தனது கூட்டாண்மையின் மூலம், மொபில் அதன் பிராண்ட் மதிப்புகளை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விக்ரம் வேதா புஷ்கர்-காயத்ரி எழுதி இயக்கியுள்ள ஆக்ஷன் திரில்லர் திரைப்படமாகும். விக்ரம் வேதாவின் கதை முழுக்க முழுக்க திருப்பங்கள் நிறைந்தது, ஒரு உறுதியான காவல்துறை அதிகாரியான விக்ரம் (சைஃப் அலி கான்) ஒரு பயங்கரமான கேங்க்ஸ்டர் வேதாவை (ஹிருத்திக் ரோஷன்) கண்காணித்துப் பிடிக்க முயல்கிறார்.

இது குறித்து எக்ஸான்மொபில் லூப்ரிகண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் CEO விபின் ராணா கூறுகையில், எங்கள் வணிகத்தை வரையறுக்கும் அடிப்படை மதிப்பு, எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றப் பயணத்தில் ஆதரவளிப்பதற்கான வலுவான அர்ப்பணிப்பாகும். மொழி மற்றும் புவியியல் வேறுபாடுகளைக் கடந்து மக்களிடையே எதிரொலிக்கும் அழுத்தமான கதைகளை முன்வைக்கும் 'விக்ரம் வேதா' போன்ற படங்களுடன் கூட்டு சேர்வது, எங்கள் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாக இருப்பதற்கும் எங்களின் வித்தியாசமான பலத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதற்குமான எங்களின் செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகும். சவால்களை எதிர்கொண்டாலும், வாழ்க்கையில் சரியான தேர்வுகளையே எப்போதும் மேற்கொள்ள வேண்டும் என்பதே படத்தின் மையக்கரு. படத்துடனான எங்கள் தொடர்பு மூலம், சரியான தேர்வுகளை செய்வதன் மூலம் ஒருவரின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிப்பது முக்கியம் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம் என்று கூறினார்.

# நானே வருவேன் - விமர்சனம்



கலைப்புலி.எஸ்.தாணு தயாரிப்பில் செல்வராகவன் இயக்கத்தில் தனுஷ், இந்துஜா, பிரபு நடிப்பில் வெளியாகியுள்ள படம் நானே வருவேன். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசை அமைத்துள்ளார். பிரபு. மற்றும் கதிர் இருவரும் இரட்டை குழந்தைகள். அதில் சிறு வயதிலிருந்து கெட்ட கொடூர மணம் கொண்டவன் கதிர், ஒரு கட்டத்தில் பலரைக் கொன்று விட்டு தனி மரமாக காட்டுப் பகுதியில் வாழ்ந்து வருகிறார். ஆனால், பிரபு தனது மனைவி மற்றும் மகளுடன் சந்தோஷமாக வாழ்கிறார். இந்நிலையில், தனுஷின் மகள் இரவு நேரங்களில் தனியாக பேசுகிறார். அவர் மீது ஒரு கெட்ட ஆவி இருப்பதை கண்டுபிடிக்கிறார். அந்த ஆவி ஒரு கோரிக்கை வைக்கிறது. அதை செய்தால் மட்டுமே உன் மகளை விட்டுப் போவேன் என சொல்கிறது. அந்த கோரிக்கை என்ன? தனுஷும் அதை செய்யத் துணிகிறார். அதன் பிறகு என்ன நடக்கிறது? என்பதே படத்தின் மீதின் கதை. கதிர், பிரபு என இரண்டு வேடங்களில் தனுஷ் நடிப்பை மிரட்டி எடுத்துள்ளார். பிரபு கதாபாத்திரத்தில் பயந்த சுபாவம் கொண்ட மனிதராக நடித்துள்ளார். மறுப்பக்கம் கதிர் கதாபாத்திரத்தில் கொடூர வில்லனாக மிரட்டுகிறார்.தனுஷ் மகளாக நடித்தவர் சிறப்பான நடிப்பை கொடுத்துள்ளார். படத்தில் முதல் பாதியில் இருந்த பரபரப்பு இரண்டாம் பாதியில் இல்லை. அதே நேரத்தில் வில்லன் தனுஷ் தனது அசுர நடிப்பால் இரண்டாம் பாதியை நகர்த்துகிறார்.செல்வராகவன் படம் என்றாலே வசனம் பேசப்படும், இதில் வசனங்களே பெரிதாக இல்லை. ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு மற்றும் யுவனின் பின்னணி இசை தான் படத்தின் மிகப்பெரிய பலம். மொத்தத்தில் நானே வருவேன் படத்தில் எல்லமே இருக்கு ஆனா இல்ல.

# பொன்னியின் செல்வன் - விமர்சனம்



லைகா தயாரிப்பில் மணிரத்னம் இயக்கத்தில் தற்போது உலகம் முழுவதும் வெளியாகியுள்ள திரைப்படம் பொன்னியின் செல்வன். கல்கியின் புகழ் பெற்ற "பொன்னியின் செல்வன்" நாவலை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படத்தில் சியான் விக்ரம், ஜெயம் ரவி, கார்த்தி, ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, பிரகாஷ் ராஜ், சரத்குமார், பிரபு, பார்த்திபன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சோழப் பேரரசின் பேரரசரான சுந்தர சோழனுக்கு ஆதித்த கரிகாலன் அருண்மொழி வர்மன் குந்தவை என்ற இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். தந்தையின் ராஜ்ஜியத்தில் பிரச்சனை வரப்போவதை ஆதித்த கரிகாலன் உணர்ந்து கொள்கிறார். இந்த செய்தியை தந்தைக்கு தெரியப்படுத்த வந்திய தேவனிடம் பொறுப்பை ஒப்படைக்கிறார்.இதற்கிடையில் சோழ படையில் இருக்கும் பெரிய பழுகுவேட்டையார் சின்ன பழுகுவேட்டையார் மற்றும் சிற்றரசர்கள் தலைமையில் மதுராந்தகனை அரசராக்க முயற்சிப்பதை வந்திய தேவன் கண்டுபிடிக்கிறார். அதன் பிறகு நடக்கும் சம்பவங்கள் என்ன என்பதே படத்தின் கதை. ஆதித்த கரிகாலனாக நடித்திருக்கும் விக்ரம் சிறப்பான நடிப்பை கொடுத்துள்ளார். வல்லவராயன் வந்திய தேவனாக வரும் கார்த்தி நடிப்பில் தனித்துவம் பெறுகிறார். நந்தினி கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் ஐஸ்வர்யா ராய் நடிப்பில் பளிச்சிடுகிறார். அருண்மொழி வர்மானாக ஜெயம் ரவி இயல்பான நடிப்பை கொடுத்துள்ளார். குந்தவையாக வரும் த்ரிஷா அழகிலும் நடிப்பிலும் பாராட்டை பெறுகிறார். ரவி வர்மனின் ஒளிப்பதிவு மற்றும் ஏ ஆர் ரகுமானின் பின்னணி இசை படத்திற்கு கூடுதல் பலத்தை தந்துள்ளது. படத்தில் தேர்வு செய்யப்பட்ட கதாபாத்திரங்கள் சிறப்பாக அமைந்துள்ளது. ஒரு சரித்திர கதையை சிறந்த முறையில் ரசிக்கும்படி சொல்லி இருப்பதற்காக இயக்குனரைப் பாராட்டலாம்.

# திருச்சி அப்போலோ மருத்துவமனை சார்பில் ஹார்ட்ட பாத்துக்கோங்க! விழிப்புணர்வு நடைபயணம்

## போலீஸ் கமிஷனர் கார்த்திகேயன் துவக்கி வைத்தார்



திருச்சி,அக்.01-

உலக இதய தினத்தை யொட்டி, திருச்சி அப்போலோ மருத்துவமனையின் சார்பில் ஹார்ட்ட பாத்துக்கோங்க என்ற தலைப்பில் விழிப்புணர்வு நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது. டாக்டர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், காவல்துறை அதிகாரிகள், கல்லூரி மாணவர்கள், இதய நோய்க்கு சிகிச்சை பெற்றவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தன்னார்வலர்கள் இந்த நடைபயணத்தில் திரளாகக் கலந்துகொண்டனர்.

திருச்சி நகர காவல் ஆணையர் கார்த்திகேயன் மற்றும் மூத்த மருத்துவர் அஷ்ரஃப் ஆகியோர் இந்த விழிப்புணர்வு நடைபயணத்தைத் துவக்கிவைத்து நடந்து சென்றனர்.

போதிய விழிப்புணர்வு இல்லாததால் இளவயதினருக்கும் மாரடைப்பு ஏற்படுவது அதிகரித்து வருவதாகவும், அதனால் இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள அவசியமானது என்றும் நிகழ்ச்சியில் பேசுகையில் கார்த்திகேயன் தெரிவித்தார். மேலும் இத்தகைய நடைபயண நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வைப் பரப்பும் திருச்சி அப்போலோ மருத்துவமனையின் முன் முயற்சிக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

மூத்த மருத்துவர் அஷ்ரஃப் பேசுகையில், இதயத்தை நலமாகப் பேணுவது குறித்தும், மேலும் இளைய தலைமுறையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

திருச்சி காவல்துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து இந்த நடைபயணம் துவங்கியது. 500 க்கும் மேற்பட்டோர் இந்த நடைபயணத்தில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இதய ஆரோக்கியத்தின் அவசியத்தை வெளிப்படுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் பலர் ஏந்திவந்தனர்.

உலக இதய தினத்தில், இதய ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வைப் பரப்பிட இந்த நடைபயணம் ஒரு நல் வாய்ப்பாக அமைந்ததாகவும், இதன் மூலம் பொதுநலனுக்கு ஒரு சிறிய பங்களிப்பை திருச்சி அப்போலோ வழங்கியுள்ளதாகவும், தொடர்ந்து இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும் திருச்சி அப்போலோ மருத்துவமனை இதயப் பிரிவு தலைவர் மற்றும் மூத்த பொதுமேலாளர் சாமுவேல் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒத்துழைப்பு அளித்த விருந்தினர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

டெல்டா பகுதியில் பிறவி இதயக் கோளாறுடன் குழந்தைகள் பிறப்பது அதிகமாகக் காணப்படும் பகுதியாக உள்ளதாகவும், அத்தகைய குழந்தைகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கு நமது அரசு திறன் மிக்க நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் சிறப்பு சிகிச்சை பிரிவு நிர்வாகி டாக்டர் சிவம் தெரிவித்தார். திருச்சி அப்போலோ மருத்துவமனையில் அனைத்து உடலியல் பிரச்சனைகளுக்கும் சிறப்பான சிகிச்சை அளிப்பதாகவும், அதிலும் குறிப்பாக இதய நோய் பிரிவைப் பொருத்த வரை பிறப்பிலேயே இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரிவான மற்றும் வெகுசிறப்பான சிகிச்சை அளிப்பதற்கான அனைத்து வசதிகளும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதய நோய் மருத்துவர்கள் காதர், ரவீந்திரன், ஷ்யாம் சுந்தர், இதய அறுவை சிகிச்சை நிபுணர் ஸ்ரீகாந்த், இதய சிகிச்சை மயக்க மருந்தியல் மருத்துவர் சரவணன், டாக்டர் ரோகிணி ஆகியோர் தற்போதைய வாழ்க்கை முறை மாற்றம், உணவு பழக்கவழக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்துப் பேசினர். திருச்சி அப்போலோ துணைப் பொது மேலாளர் சங்கீத் உடனிருந்தார்.



திருச்சியில் தரைக்கடை மற்றும் தள்ளுவண்டி வியாபாரிகளின் கடைகளை அப்புறப்படுத்தும் திருச்சி மாநகராட்சி கோ அபிஷேகபுரம் கோட்ட நிர்வாகத்தை கண்டித்து தரைக்கடை தள்ளுவண்டி வியாபாரிகள் சங்கம் சி.ஐ.டி.யு. சார்பில் கோ அபிஷேகபுரம் கோட்ட அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டம் நடந்தது. இதில் சங்க தலைவர் கணேசன், சி.ஐ.டி.யு. மாவட்டச் செயலாளர் ரெங்கராஜன்ர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய அளவில் எல்.ஐ.சி முகவர் சங்கங்களின் கூட்டுக் குழு சார்பில் தர்ணா போராட்டம் நடந்தது. திருச்சி அலுவலகத்தில் 6 கிளைகளைசேர்ந்தநிர்வாகிகள்,தலைவர்கள்,செயலாளர்கள்,உறுப்பினர்கள்போராட்டத்தில் கலந்து கொண்டனர். போராட்டத்திற்கு திருச்சி மாவட்ட தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். இதில் அகில இந்திய செயற்குழு உறுப்பினர் கோகுலகிருஷ்ணன் உள்பட கலந்து கொண்டனர்.

# நாகையில் திமுக மாவட்ட செயலாளர் என்.கவுதமன் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு: திரளான நிர்வாகிகள் பங்கேற்பு

நாகப்பட்டினம்,அக்.01-

நாகை மாவட்ட செயலாளராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள என்.கவுதமன், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். நாகை மாவட்ட செயலாளராக என்.கவுதமன் செயல்பட்டு வந்தார். சட்டசபைத் தேர்தலுக்கு பிறகு திமுக தலைமையிலான அரசு அமைந்தபிறகு, இவருக்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகத் தலைவராக பொறுப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் திமுகவில் உட்கட்சி தேர்தல் நடந்து வருகிறது. இதில் நாகை மாவட்ட செயலாளராக என்.கவுதமனை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதையடுத்த மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றுள்ள என்.கவுதமன் நேற்று நாகைக்கு வந்தார். அவரை கட்சியினர் உற்சாகத்துடன் வரவேற்றனர். பின்னர் சுற்றுச் சூழல்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையில், திமுக அலுவலகத்திலிருந்து பேரணியாக புறப்பட்டு, அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியதை செலுத்தினர். இதைத்தொடர்ந்து புத்தூர் ரவுண்டானாவில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பின்னர் திருக்குவளையில் உள்ள கலைஞர்,

முத்துவேல், முரசொலிமாறன், அஞ்சும் ஆகியோரது சிலைகளுக்கு அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையில், மாவட்ட செயலாளர் என்.கவுதமன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.



Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



திருவாரூர் வட்டம் சொரக்குடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர்.

# கிராம சபை கூட்டங்களில் விவசாயிகள் பங்கேற்று வேளாண்மை-உழவர் நலத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை அறிந்து கொள்ள வேண்டும்

## கலெக்டர் ப.காயத்ரி கிருஷ்ணன் வேண்டுகோள்

திருவாரூர்,அக்.01

தமிழ்நாட்டில் கிராம சபைக்கூட்டங்கள்ஆண்டுதோறும் அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளில் ஜனவரி-26 (குடியரசு தினம்), மே-1 (உழைப்பாளர் தினம்), மார்ச்-22 (உலக தண்ணீர் தினம்), ஆகஸ்ட்-15 (சுதந்திர தினம்), அக்டோபர்-2 (காந்தி ஜெயந்தி) மற்றும் நவம்பர்-1 (உள்ளூர் நிர்வாக தினம்) ஆகிய தினங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் நடத்தப்படுகிறது. கிராம சபை கூட்டங்களில் வேளாண்-உழவர் நலத்துறை திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கவும், காட்சிப்படுத்தவும் பயனாளிகள் பட்டியலை பார்வைக்கு வைத்திடவும் அரசாணை (நிலை) எண்.41, வேளாண்மை உழவர் நலத்துறை, நாள்: 23.02.2022இல் ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மாவட்ட வேளாண்மை இணை இயக்கநர்களை கிராமசபைக் கூட்ட நிகழ்வினை வேளாண்மைத் துறை மற்றும் அதன் சகோதர துறைகளுடன் ஒருங்கிணைந்து நடத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கிராமசபைக் கூட்டங்களில், வேளாண்மை-உழவர் நலத்துறையில் பல்வேறு திட்டங்களில் 2022-2023ஆம் ஆண்டில் பயன்பெற்றத் திட்டப் பயனாளிகளின் பெயர் விபரங்களை ஊராட்சி வாரியாக தயாரித்து, வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திட பொதுமக்கள் பார்வையிடும் வண்ணம் வைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வேளாண்மையில் புத்தாக்கம் ஏற்படுத்தி நிலையான உயர்வளர்ச்சி அடைவதற்கு தமிழக முதலமைச்சர் முத்தான மூன்று பத்தாண்டு தொலை நோக்கு திட்டங்களை வேளாண்மை உழவர் நலத்துறைக்கு வழங்கியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச் செய்து தற்போதுள்ள நிகர பயிரிடு பரப்பான 60 விழுக்காடு 75 விழுக்காடாக உயர்த்தப்படும்.

10 இலட்சம் எக்டர் அளவுக்கு உள்ள இருபோக சாகுபடி நிலங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் இரு மடங்காக அதாவது 20 இலட்சம் எக்டராக உயர்த்தப்படும்.

உணவு தானியங்கள், தேங்காய், பருத்தி, சூரிய காந்தி மற்றும் கரும்பு ஆகிய பணப் ப யிர் க ளுக் கான வேளாண் ஆக்கத்திறனில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம்பிடிக்கும்.

இக்கூட்டத்தில் வேளாண்மை-உழவர் நலத்துறையின் உழவன் செயலி பற்றிய பயன்பாட்டினை எடுத்துரைத்து, தேவைப்படும் விவசாயிகளுக்கு பதிவிறக்கம் செய்தும் கொடுக்கப்பட உள்ளது. பிரதம மந்திரியின் கிசான் சம்மான் நிதி திட்டத்தில் விவசாயிகள் தங்கள் ஆதார் எண்களை இணைக்கும் அவசியத்தை எடுத்துக் கூறி அத்திட்டப் பயன்களை தொடர்ந்து பெற்றுக் கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படவுள்ளது. எனவே, விவசாயிகள் தங்கள் கிராம பஞ்சாயத்துகளில் 02.10.2022 அன்று நடைபெறவுள்ள கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு வேளாண்மை-உழவர் நலத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டப்பயன்களை அறிந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் ப.காயத்ரி கிருஷ்ணன்., கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

**திருச்சிராப்பள்ளி முதாலம் சாா்பு நீதிமன்றம், (I ASJ) முன்பாக.**
**E.P.No.149/2021 in O.S. No.149/2021**

வரதராஜபெருமாள்,
த/பெ.கோபாலகிருஷ்ணன்,
நெ. 2/3, 1வது தெரு, ஸ்டேட் பேங்க் ஆபிசர்ஸ் காலனி,
கிராப்பட்டி, திருச்சிராப்பள்ளி.
– மனுதாரர் /வாதி
– எதிர் –
R.ஞானமுத்து, த/பெ.ராயர்சாமி,
82, 7வது குறுக்கு தெரு, பாரதியார் தெரு,
திருச்சிராப்பள்ளி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் எதிர்மனுதாரரை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டி கனம் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு வருகிற 04.11.2022–ந் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அதனால் வருகிற 04.11.2022–ந் தேதியன்று காலை 10.30 மணிக்கு தாங்கள் கனம் நீதிமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தாங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் இந்த மனு மனுதாரருக்கு சாதகமாகவும், தாங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதையும் அறியவும்.

V.உதயகுமார்,B.A.,B.L.,
வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக்,
திருச்சி.

**நகை ஏல அறிவிப்பு**

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா, கோமல் எண். 1/74, பாலக்கரை "சிவா பைனான்ஸ்" நகை அடகு கடையில் 05.09.2018 முதல் 30.06.2021 வரை உள்ள காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை மயிலாடுதுறை RDO அவர்களின் KDIS No.2334/2022/ A-2 உத்தரவுப்படி 12.10.2022 காலை 10.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

M.ரவிச்சந்திரன்,
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

**நகை ஏல அறிவிப்பு**

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா, குத்தாலம் எண். 89, பெரிய கடைத் தெரு "மஹாவீர் பைனான்ஸ்" நகை அடகு கடையில் 05.12.2017 முதல் 23.01.2021 வரை உள்ள காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை மயிலாடுதுறை RDO அவர்களின் KDIS No.1484/2022/ A-2 உத்தரவுப்படி 12.10.2022 மதியம் 2.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

M.ரவிச்சந்திரன்,
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

கூட்டுறவே ! நாட்டுயுர்வு !!

**ஒ.என்.71 திருவாரூர் மாவட்ட கூட்டுறவு ஊழியர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் லிட்., திருவாரூர்.**
காகிதக்காரர் தெரு, 610 001, திருவாரூர் வட்டம்.

**பேரவைக் கூட்ட அறிவிப்பு**

பேரன்புடைமீர் வணக்கம்,

சங்க பேரவை கூட்டம் 11.10.2022 செவ்வாய் கிழமை மாலை 4.00 மணியளவில் திருவாரூர் காகிதக்காரத் தெரு சங்க அலுவலக வளாகத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

1. 2020 – 2021 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை மற்றும் நிர்வாக அறிக்கையினை வாசித்து ஒப்புதல் அளித்தல்.
2. 2022 – 2023 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.
3. தலைவரால் கொண்டு வரப்படும் இதர தீர்மானங்கள்.

தலைவர் மற்றும் இயக்குநர்கள்.

இடம் திருவாரூர்
நாள் 30.09.2022.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், மயிலாடுதுறை**

வெ.முருகன்,
த/பெ.வெங்கடாசலபதி,
14.பி. பட்டமங்கல புதுத் தெரு,
மயிலாடுதுறை,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வட்டாட்சியர், மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது அத்தை "காமாட்சி" க/பெ.ரெங்கநாதன், என்பவர் கடந்த 12.08.2006–ம் தேதியன்று வ.உ.சி.தெரு, கழுக்காணிமுட்டம், திருஇந்தளூர் கிராமம், மயிலாடுதுறை என்ற முகவரியில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மாண்பமை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். அம் மனுவினை பொறுத்து எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியான 7 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்பாக ஆஜராகி தனது ஆட்சேபனையை தெரிவிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

வெ.முருகன்,
மனுதாரர், மயிலாடுதுறை.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், மயிலாடுதுறை**

மணிமேகலை,
38, நீடூர் கிராமம், கோவில்பத்து,
மயிலாடுதுறை வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வட்டாட்சியர், மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் "உத்திராடம்" என்பவர் கடந்த 01.07.2008–ம் தேதியன்று மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மாண்பமை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். அம் மனுவினை பொறுத்து எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியான 7 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்பாக ஆஜராகி தனது ஆட்சேபனையை தெரிவிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

மணிமேகலை,
மனுதாரர், மயிலாடுதுறை.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.**
**ந.க.அ2/3468/2022**

சிவக்குமார், த/பெ.மாணிக்கம்,
தேவச்சிகவுண்டன் புதூர், சேங்கல் கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
1.சார் ஆட்சியர், குளித்தலை.
2.வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்.
– எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாத்தா "ராமசாமி" என்பவர் கடந்த 17.03.1983–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி சார் ஆட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

P.நாகேஷ்வரன், M.A.,B.Ed.,B.L.,
வழக்கறிஞர், கரூர்.

# திருமருகல் ஒன்றியத்தில் மறைந்த தலைவர் சீனிவாசராவ் நினைவு தினம் அனுசரிப்பு

நாகப்பட்டினம்,அக்.01-

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் புத்தகரம் ஊராட்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மறைந்த தலைவர் பி.சீனிவாசராவ் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து மாற்று கட்சியில் இருந்து விலகி சுமார் 20- பேர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் ஜி.எஸ்.ஸ்டாலின் பாபு தலைமை வகித்தார், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி முன்னிலை வகித்து புதிதாக .இணைந்த கட்சியினரை சால்வை அணிவித்து வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் பாரதி வாலிபர் சங்க மாவட்ட பொருளாலர் என்.எம்.பாலு, மாவட்ட குழு உறுப்பினர் லெனின் விவசாய சங்க துணை செயலாளர் தமிழரசன் முன்னாள் ஒன்றிய செயலாளர் ஜெயபால் ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் புத்தகரம் கிளை செயலாளர் தியாகராஜன் நன்றி கூறினார்.

# ஏவிசி கல்லூரியில் சரஸ்வதி பூஜை விழா



மயிலாடுதுறை,அக்.01-

மயிலாடுதுறை அருகே உள்ள ஏவிசி தன்னாட்சிக் கல்லூரியில் சரஸ்வதி பூஜை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. கல்விக்கடவுளான சரஸ்வதிக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் கல்லூரியில் சரஸ்வதி பூஜை விழா கொண்டாடுவது வழக்கம் அந்த வகையில் இந்த ஆண்டுக்கான சரஸ்வதி பூஜை கல்லூரியின் நூலகத்தில் விமர்சையாக கொண்டாடப்பட்டது இதில் ஏவிசி கல்வி நிறுவனங்களில் நிர்வாக அதிகாரியும் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் கே. வெங்கடராமன் பூஜையில் கலந்து கொண்டு பல்வேறு துறைகளை சேர்ந்த பேராசிரியர்களுக்கு புதிய கோப்புகளை வழங்கி பாராட்டினார் பின்னர் ஊழியர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தாடைகளை வழங்கி கௌரவித்தார். கல்லூரி தேர்வு கட்டுப்பாட்டு நெறியாளர் மேஜர் ஜி.ரவிசெல்வம், முதல்வர் ஆர். நாகராஜன், துணை முதல்வர்(மாலை நேர கல்லூரி) டாக்டர் எம். மதிவாணன், ஏவிசி பொறியியல் கல்லூரி இயக்குனர் எம்.செந்தில்முருகன் மற்றும் திரளான பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**அறிவிப்பு**

கரூர் மாவட்டம், கரூர் வருவாய்கோட்டம். கரூர் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அலுவலக எண்.ந.க.அ2/5500/2022.

கரூர் வருவாய் கோட்டம், புகளூர் வட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி கிராமம், பூலாம்பாளையம் அஞ்சல், நெ.76 மூர்த்திபாளையம் என்ற முகவரியைச் சேர்ந்த நல்லசாமி, த/பெ.பழனியப்பன் ஆகிய நான் எனது தந்தை "பழனியப்பகவுண்டர் (எ)பூசாரி" த/பெ.நல்லியண்ணகவுண்டர் என்பவர் கடந்த 25.02.1987–ம் தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டதற்கு இறப்பினை பதிவு செய்யக்கோரி மனு செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான 7 நாட்களுக்குள் தொடர்புடைய கரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம்.

ப.நல்லசாமி, த/பெ.பழனியப்பன், நெ.76,மூர்த்திபாளையம்,
பூலாம்பாளையம் அஞ்சல், புஞ்சைதோட்டக்குறிச்சி கிராமம்,
புகளூர் வட்டம், கரூர் மாவட்டம்.

**அறிவிப்பு**

கரூர் மாவட்டம், கரூர் வருவாய்கோட்டம். கரூர் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அலுவலக எண்.ந.க.அ2/5499/2022.

கரூர் வருவாய் கோட்டம், புகளூர் வட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி கிராமம், பூலாம்பாளையம் அஞ்சல், நெ.76 மூர்த்திபாளையம் என்ற முகவரியைச் சேர்ந்த நல்லசாமி, த/பெ.பழனியப்பன் ஆகிய நான் எனது தாயார் "மாராயி" க/பெ,பழனியப்பகவுண்டர்(எ)பூசாரி என்பவர் கடந்த 08.10.1994–ம் தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டதற்கு இறப்பினை பதிவு செய்யக்கோரி மனு செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான 7 நாட்களுக்குள் தொடர்புடைய கரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம்.

ப.நல்லசாமி, த/பெ.பழனியப்பன், நெ.76,மூர்த்திபாளையம்,
பூலாம்பாளையம் அஞ்சல், புஞ்சைதோட்டக்குறிச்சி கிராமம்,
புகளூர் வட்டம், கரூர் மாவட்டம்.

**அசல்/ நிலம் சொத்து ஆவணம் காணவில்லை**

R.ஜனப்பிரியா (30/2022) த/பெ.லேட்.ராஜகோபால், 339, எம்.பிளாக், PKV Maha Nagar அமர்பிரகாஷ் கோவில் வேல்ஸ், குன்றத்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு–600 069 ஆகிய நான், என் தாயார் கிருஷ்ணவேணி பெயரில் 03.01.1997–ம் தேதியன்று முசிறி சார்பதிவாளர் ஆவண எண்.10/1997 என்ற எண்ணில் நிலம் பதிவாகி உள்ளது. மேற்படி இடத்தில் எனது தாயார் வீடு கட்டியுள்ளார். நான் மேற்படி எனது தாயார் கிருஷ்ணவேணி பெயரில் உள்ள அசல் கிரையப் பத்திரத்தினை எடுத்துக் கொண்டு கடந்த 20.09.2022–ம் தேதி காலை 10.00 மணியளவில் முசிறி தாலுக்கா அலுவலகத்திற்கு மேற்படி நிலத்தினை என் பெயருக்கு வாரிசு அடிப்படையில் பட்டா வேண்டி மனு கொடுக்க சென்றேன். அப்பொழுது நான் கையில் வைத்திருந்த பையில் இருந்து எனது தாயார் பெயரில் உள்ள அசல் கிரையப் பத்திரமானது தவறி கீழே விழுந்து விட்டது. நான் அக்கம் பக்கம் விசாரித்தும், பல இடங்களில் தேடியும் மேற்படி எனது தாயார் லேட்.கிருஷ்ணவேணி பெயரில் உள்ள அசல் கிரையப் பத்திரமானது கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக நான் திருச்சி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆன்லைன் மூலம் புகார் ரசீது எண்.CHJ22173919/2022 என்ற எண்ணாக பதிவாகி உள்ளது.

R.ஜனப்பிரியா, (30/2022) த/பெ.லேட்.ராஜகோபால்,
எண். 339, எம்.பிளாக், PKV Maha Nagar, அமர் பிரகாஷ்
கோவில் வேல்ஸ், குன்றத்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு–600 069
செல் : 93846 81880.

**அசல்/ நிலம் சொத்து ஆவணம் காணவில்லை**

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மேல்பத்து கிராமம், புக்காத்துரை, கதவு எண்.548 குடித் தெருவில் வசிக்கும் ஆறுமுகம் மகன் விஸ்வநாதன் ஆகிய நான் என் தகப்பனார் ஆறுமுகம் பெயரில் உள்ள அசல் கிரையப் பத்திரம் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.895/1984 ஆகும். மேற்படி எனது தகப்பனார் பெயரில் உள்ள அசல் கிரையப் பத்திரத்தினை கடந்த 20.09.2022 தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் எடுத்துக் கொண்டு முசிறி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு நான் முசிறி கைகாட்டிக்கு வந்து என் இருசக்கர வாகனத்தில் இருந்த பத்திரத்தினை பார்த்த பொழுது மேற்படி அசல் கிரையப் பத்திரத்தினை காணவில்லை. நான் அக்கம் பக்கம் விசாரித்தும், பலஇடங்களில் தேடிப் பார்த்தும் மேற்படி அசல் பத்திரமானது கிடைக்கவில்லை.

மேற்படி அசல் கிரையப் பத்திரம் சம்பந்தமாக தகவல் தெரிந்தால், எனக்கோ அல்லது முசிறி காவல் நிலையத்திலோ தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இது சம்பந்தமாக நான் திருச்சி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆன்லைன் மூலம் புகார் ரசீது எண்.CHV22172859 என்ற எண்ணாக பதிவாகி உள்ளது.

விஸ்வநாதன், த/பெ.ஆறுமுகம்,
எண். 548, குடித் தெரு, மேல்பத்து, புக்காத்துரை,
மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.
செல் : 97879 19800.

**அசல்/ நிலம் சொத்து ஆவணம் காணவில்லை**

நான் கீழ்க்கண்ட முகவரியில் தொழில் செய்து வருகிறேன். எனக்கும் எனது சகோதரருக்கும் சொந்தமான தாத்தையங்கார்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவான 1098/2011, 255/2010 என்ற ஆவண எண் கொண்ட ஆவணங்களை கடந்த 07.09.2022 தேதி வில்லங்க சான்று சரிபார்ப்பதற்காக துறையூருக்கு எனது இரு சக்கர வாகனத்தில் இடது பக்கம் மாட்டிக் கொண்டு சென்றபோது பையின் காதறுந்து வழியில் எங்கோ விழுந்து விட்டது. வந்த வழியில் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. மேற்கண்ட, பத்திரங்களை கண்டெடுப்பவர்கள் எனது முகவரிக்கோ அல்லது காவல் நிலையத்திற்கோ தகவல் தெரிவிக்குமாறு கேட்டு கொள்கிறேன். மேற்கண்ட, விவாகாரம் தொடர்பாக காவல்துறைக்கு ஆன்லைனில் CHV22175822 என்ற எண்ணாக புகார் செய்துள்ளேன்..

விஸ்வநாதன்,
நாதன் பீட்ஸ், எண் 90/7, நாமக்கல் மெயின் ரோடு, திருமனூர்
போஸ்ட், துறையூர் தாலுகா, திருச்சி 621 001.
செல் : 84388 98894.

# முசிறி - நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 27 கி.மீ நீளத்திற்கு ரூ. 184.15 கோடி மதிப்பீட்டிலான தார்ச்சாலை அமைக்கும் பணி

## அமைச்சர் கே.என்நேரு தொடங்கி வைத்தார்



திருச்சி,அக்.01- நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்நேரு (30.09.2022) முசிறி - நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 27 கி.மீ நீளத்திற்கு ரூபாய் 184.15 கோடி மதிப்பீட்டிலான தார்ச்சாலை அமைக்கும் பணியினை (முசிறி-தொட்டியம் சாலையில் கொக்கு வெட்டியான் கோவில் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குத்து விளக்கேற்றி, அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இச்சாலை அமைப்பது தொடர்பான குறும்படக் காட்சியினை அமைச்சர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் பேசியதாவது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி - நாமக்கல் சாலையில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் போக்குவரத்து வசதியினை கருத்தில் கொண்டு 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 184.15 கோடி மதிப்பில் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு முதலமைச்சர் மக்களுக்காகவும், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றிடவும் பல்வேறு திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள். இந்த சாலை அமைப்பதன் மூலம் போக்குவரத்து சீராவதோடு, இப்பகுதியும் நல்ல வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்திடும். இந்த 27 கிலோ மீட்டர் நீள சாலையில், கடின புருவங்களுடன் கூடிய இரண்டு வழிச்சாலை 15 கிலோமீட்டர் நீளத்திலும் நான்கு வழிச்சாலை 11.89 கிலோமீட்டர் நீளத்திலும் அமைக்கப்படுகிறது 16 சிறு பாலங்கள் அகலப்படுத்தலும் கட்டமைப்பு செய்யப்படுகிறது. புதிதாக இரண்டு சிறு பாலங்கள் அமைக்கப்படுகிறது.

7039 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டப்படுகிறது. 760 மீட்டர் நீளத்திற்கு பாதுகாப்புச் சுவர் கட்டப்படுகிறது.பயணியர் நிழற்குடையுடன் கூடிய 31 பேருந்து நிறுத்தம் அமைக்கப்படுகிறது. 6660 மீட்டர் நீளத்திற்கு வடிகால் கட்டப்படுகிறது. இப்பணியினைத் தரமாகவும் உரிய காலத்திலும் நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்.என்று அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்வில் கலெக்டர் மா.பிரதீப் குமார், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் செ.ஸ்டாலின் குமார், எம்.பழனியாண்டி, வணக்கத்திற்குரிய மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், தேசிய நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் எஸ். சேதுபதி, உதவி செயற்பொறியாளர் வி.ரவிக்குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் த.இராஜேந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் சே.கிருஷ்ணவேணி, மாலா இராமச்சந்திரன், சதுரைராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் 300 கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா: அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது



பெரம்பலூர்,அக்.01- பெரம்பலூர் தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ், நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் தலைமையில் பெரம்பலூர் மற்றும் ஆலத்தூர் வட்டாரத்திற்கு உட்பட்ட 300 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைகளை (30.09.2022) வழங்கினார்கள்.இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் சி.ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் போக்குவரத்துத்துறை அமைச்சர் பேசியதாவது: அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இலவசமாக பிரசவம் பார்க்க கூடிய திட்டத்தை முதன் முதலாக டாக்டர் கலைஞர் கொண்டு வந்தார்கள். அவ்வாறு பிரசவம் பார்க்கும் போது பிரசவம் பார்க்க வருகின்ற தாய்மார்கள் மற்றும் குழந்தை அவர்களது குழந்தை நலமுடனும் ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக அரசின் மூலமாக உதவி தொகையும் வழங்கினார். அடுத்த கட்டமாக ஒரு பெற்றோரின் கடமையாக பெண் குழந்தை நல்ல முறையில் பிரசவம் பார்க்க வேண்டும் என்பதைப் போல அரசு சமுதாய வளைகாப்பினை எடுத்து நடத்த வேண்டும் என டாக்டர் கலைஞர் முதல்வராக இருந்த போது இந்த சமுதாய வளைகாப்பு திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் இந்தத் திட்டம் தொடர்ந்து சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. உங்களுக்கெல்லாம் இந்த அரசு உறுதுணையாக இருக்கும் என்பதற்கான எடுத்துக்காட்டு தான் இந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு பெண்களுக்கும் தந்தையாகவும், உடன் பிறந்த சகோதரராகவும் இருந்து உங்கள் நலன் மீது அக்கறையோடு செயல்பட்டு இந்த நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்கள்.

அரசு நகர பேருந்துகளில் பெண்கள் எந்த கட்டணமும் இல்லாமல் பயணம் செய்யலாம் என்ற உன்னதமான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்து வெற்றிகரமாக செயல் படுத்தியுள்ளார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் இந்த இலவச பேருந்து பயண திட்டம். இந்தத் திட்டம் நம்முடைய தமிழ்நாட்டில் மட்டுமே செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் இந்த திட்டத்தை அறிவித்தது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது என சென்னையில் உள்ள பல்வேறு பெண்கள் தெரிவித்துள்ளனர்.

அனைத்து பெண்களும் கல்லூரி படிப்பை படிக்க வேண்டும் என்பதற்காகவும், குடும்ப வறுமை மற்றும் குடும்ப சூழல் காரணமாகவும், படிப்பை பாதியிலேயே விட்டு விடாமல் இருப்பதற்காகவும், அனைத்து பெண்களும் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்ற காரணத்திற்காகவும் புதுமைப் பெண் என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள்.

அரசு பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது. ஒரு பெண் குழந்தை தன்னுடைய பெற்றோர்களுக்கு சுமை ஏற்றாமல் தன்னுடைய செலவிலேயே படிப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் இந்த சிறப்பான திட்டத்தை துவக்கி வைத்துள்ளார்கள். இன்னும் ஐந்து ஆண்டுகளில் பார்த்தால் நம்முடைய கிராமங்களில் கல்லூரிக்கு போகாத பெண்களே இல்லை என்று சொல்கின்ற அளவிற்கு எல்லா பெண்களும் கல்லூரிக்குச் சென்று படித்து நல்ல கல்வியை பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். எதையும் தெளிவாக தெரிந்திருக்க வேண்டுமென்றால் கல்வி முக்கியம் என்பதற்காக தான் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் பெண் கல்வியை உறுதி செய்வதற்காக இந்த புதுமைப்பெண் திட்டத்தை கொண்டு வந்துள்ளார்கள்.


நீங்கள் அனைவரும் ஆரோக்கியமான முறையில் குழந்தையினை பெற்று எடுக்க வேண்டும். அந்த குழந்தையை ஆரோக்கியமான முறையில் வளர்த்து நல்ல கல்வியை அளிக்க வேண்டும் என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

விழாவில் கலந்து கொண்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு 5 வகையான கலவை சாதங்கள் வழங்கப்பட்டது. அனைத்து கர்ப்பிணி பெண்களுக்கும் நமது பாரம்பரிய தமிழர் முறைப்படி மாலை அணிவித்து வளைகாப்பு விழா நடத்தப்பட்டது. அவர்களுக்கு சில்வர் தட்டு, வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், பிளவுஸ் பிட், ஒரு டஜன் வளையல் அடங்கிய சீர்வரிசை மற்றும் தாய் சேய் நலத்திற்கு ஆதாரமான முதல் 1000 நாட்கள் பற்றிய விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அடங்கிய பொருட்கள் சீர்வரிசை தட்டுகளில் வைத்து போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 300 தாய்மார்களுக்கு வழங்கினார்கள்.

மேலும் ஊட்டச்சத்து மாத நிறைவு விழாவினை முன்னிட்டு குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், போஷான் அபியான் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களின் பணிகளை பாராட்டி போக்குவரத்து துறை அமைச்சர் நினைவு பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியர் சு.நிறைமதி, ஒன்றிய குழு தலைவர்கள் (ஆலத்தூர்) நா.கிருஷ்ணமூர்த்தி, (வேப்பந்தட்டை) கே.ராமலிங்கம், (பெரம்பலூர்) மீனா அண்ணாதுரை, பெரம்பலூர் நகராட்சி துணைத் தலைவர் ஹரி பாஸ்கர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சுகந்தி, வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் பிரேமா, அருணா, பூமா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சௌந்தரவள்ளி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை முக்கனி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி விற்பனை ரூ.1.30 கோடி இலக்கு

## கலெக்டர் கவிதா ராமு தகவல்



புதுக்கோட்டை,அக்.01- புதுக்கோட்டை புதிய பேருந்துநிலைய வளாகத்தில் அமைந்துள்ள முக்கனி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி சிறப்புத் தள்ளுபடி முதல் விற்பனையினை, கலெக்டர் கவிதா ராமு, ; (30.09.2022) துவக்கி வைத்தார்.

பின்னர் கலெக்டர் ; தெரிவித்ததாவது; தமிழக அரசின் கூட்டுறவு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் கடந்த 87 ஆண்டுகளாக தமிழக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை கொள்முதல் செய்து, இந்தியா முழுவதும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்கி பேருதவி புரிந்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தீபாவளி பண்டிகையின் போது தமிழக அரசு வழங்கும் 30சூ சிறப்புத் தள்ளுபடி விற்பனை திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த சிறப்பு விற்பனைக்காக புதிய வடிவமைப்புடன் கூடிய கோவை மென்பட்டு புடவைகள், காஞ்சிபுரம், சேலம், ஆரணி, திருபுவனம் போன்ற பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகள், கோவை கோரா காட்டன் சேலைகள், கூறைநாடு புடவைகள் மேலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவான பருத்தி சேலைகள், லினன் புடவைகள் போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், வேஷ்டி, லுங்கி, துண்டு இரகங்கள், பருத்தி சட்டைகள், திரைச்சீலைகள், மிதியடிகள், நைட்டீஸ், மாப்பிள்ளை செட் மற்றும் ஏற்றுமதி இரகங்கள் ஏராளமாகத் தருவிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மண்டலத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தின் மூலம் கடந்த தீபாவளி 2021 பண்டிகை காலத்தில் ரூ.749.15 இலட்சம் விற்பனை செய்யப்பட்டது. தற்பொழுது தீபாவளி 2022 -க்கு ரூ.1,300 இலட்சம் விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை விற்பனை நிலையத்தில் தீபாவளி 2021 பண்டிகை காலத்தில்; ரூ.94 இலட்சம் விற்பனை செய்யப்பட்டது. தற்பொழுது தீபாவளி 2022 -க்கு ரூ.130 இலட்சம் விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், 'கனவு நனவு திட்டம்' என்ற சேமிப்பு திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதன்படி 10 மாத சந்தா தொகை வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்டு, 11வது மற்றும் 12வது மாத சந்தா தொகையை கோ-ஆப்டெக்ஸ் செலுத்தி, மொத்த முதிர்வு தொகைக்கு தேவைப்படும் துணிகளை 20சூ அரசு தள்ளுபடியுடன் வழங்கப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள், அரசு ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் கோ-ஆப்டெக்ஸில் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி விற்பனையினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கலெக்டர் கவிதா ராமு, ; தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக குழு உறுப்பினர் லெனின், மண்டல மேலாளர் அம்சவேணி, மேலாளர் கூடுதல் பொறுப்பு அய்யப்பன், விற்பனை நிலைய மேலாளர்கள் பாண்டியன், ராஜ்முகமது மற்றும் வாடிக்கையாளர்கள், பொதுமக்கள், கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

# நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர் அ.அருண்தம்புராஜ் தலைமையில் நடைபெற்றது



நாகப்பட்டினம்,அக்.01- நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் தலைமையில் (30.09.2022) நடைபெற்றது.

பிரதம மந்திரியின் விவசாயி கௌரவ நிதி திட்டம் (P ஆ-முஐளுயுN): பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கௌரவ நிதித்திட்டத்தின் கீழ் விவசாய குடும்பத்திற்கு மூன்று தவணையாக தலா ரூ.2000ஃ- வீதம் ஆண்டிற்கு ரூ.6000ஃ- வழங்கப்படுகிறது. அடுத்த தவணைத் தொகையை தொடர்ந்து பெறுவதற்கு ஆதார் எண்ணுடன் கைபேசி எண் மற்றும் வங்கி கணக்கு எண்ணை இணைத்து கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். எனவே இத்திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற விவசாயிகள் உடனடியாக தங்கள் பகுதிக்கு அருகாமையில் உள்ள பொது இ-சேவை மையம் அல்லது தபால் நிலையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் (முயுஏஐயு ஙP) - அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - ஒருங்கிணைப்பு கூட்டம்: நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2022-23ஆம் ஆண்டிற்கு கலைஞர் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள 51 கிராம ஊராட்சிகளிலும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பங்குபெறு ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் விவசாய சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் கலைஞர் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்து விவரிக்கப்பட்டும், விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்தும் ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் விவசாயிகள் பங்கு பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 26.09.2022 வரை கலைஞர் திட்டத்தின் கீழ் வரும் கிராம ஊராட்சிகளில் 14 கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை நாகப்பட்டினம் வட்டாரத்தில் 7 கிராம ஊராட்சிகளிலும், திருமருகல் வட்டாரத்தில் 11 கிராம ஊராட்சிகளிலும், கீழ்வேளூர் வட்டாரத்தில் 10 கிராம ஊராட்சிகளிலும், கீழையூர் வட்டாரத்தில் 7 கிராம ஊராட்சிகளிலும், தலைஞாயிறு வட்டாரத்தில் 6 கிராம ஊராட்சிகளிலும், வேதாரண்யம் வட்டாரத்தில் 10 கிராம ஊராட்சிகளிலும் ஆக மொத்தம் 51 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் வேளாண்மை- உழவர் நலத்துறை மூலம் பண்ணை கருவிகளான கடப்பாறை (1 எண்), இரும்பு சட்டி (1 எண்), களைக்கொத்தி (1 எண்), மண்வெட்டி (1 எண்) மற்றும் கதிர்அருவாள் (1 எண்) ஆகியன ரூ.3000ஃ- மதிப்பில் ஒரு தொகுப்பாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஐஊஃஊஏ விவசாயிகளுக்கு 90 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும் அனுமதிக்கப்படும்.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தானியங்களை சேமித்து பாதுகாப்பு செய்யும் பொருட்டு ரூ.4,956ஃ- மதிப்பில் 8ஓ6 மீட்டர் அளவிலான தார்ப்பாய் 50 சத மானியமாக ரூ.2,100 என்றிற விகிதத்தில் விநியோகம் செய்யப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ் பயிர்களுக்குத் தேவையான உரம், தென்னைக் கன்றுகள், பயறுவிதைகள் மற்றும் பல இடுபொருட்கள் மானிய விலையிலும், விலையில்லாமலும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இத்திட்டத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறையையும் சேர்த்து 17 துறைகள் இதில் இணைந்து செயல்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விவசாய நிலங்களில் நீடித்த பசுமை போர்வைக்கான இயக்கம்(வுN ஆஐளுபுஊ): இத்திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு சாகுபடிக்கு போக மீதமுள்ள நிலங்களில் வனப்பரப்பினை அதிகரிக்கும் வகையில் வேளாண் காடுகள் உருவாக்கிட 100 சத மானியத்தில் வேம்பு, தேக்கு, செம்மரம், மகாகனி, ஈட்டி மரம், வேங்கை மற்றும் மலைவேம்பு ஆகிய மரக்கன்றுகள் வனத்துறை நாற்றுப்பண்ணை மூலமாக இலவசமாக வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு நபருக்கு ஒரு எக்டேருக்கு 400 மரக்கன்றுகள் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் "உழவன் செயலி" மூலமாக முன் பதிவு செய்து (அல்லது) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து பயன்பெறலாம். வழங்கப்படும் மரக்கன்றுகளில் உயிருடன் இருக்கும் மரக்கன்றுகளுக்கு மட்டும் அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஒரு கன்றுக்கு ரூ.7- வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படும். 2022-23ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தில் 425 விவசாயிகள் 62,624 மரக்கன்றுகள் கேட்டு பதிவு செய்துள்ளனர். இதில் 1 விவசாயிக்கு 200 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வி.ஷகிலா , வேளாண்மை இணை இயக்குநர் ஜா.அகண்டராவ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் கா.ப.அருளரசன,; தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர். சி.ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வெங்கடேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார். விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்ட திமுக செயலாளராக தமிழக போக்குவரத்து துறை எஸ்.எஸ்.சிவசங்கர் 5வது முறையாக போட்டியின்றி தேர்வு



அரியலூர்,அக்.01- அரியலூர் மாவட்ட திமுக செயலாளராக தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் 5வது முறையாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திமுகவின் 15வது உட்கட்சித் தேர்தல் கடந்த சில தினங்களுக்கு முன் நடத்தப்பட்டுஅரியலூர் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் பட்டியலை திமுக கட்சி மேலிடம் வெளியிட்டது.இதனையடுத்து தமிழக போக்குவரத்து துறை அமைச்சர்எஸ்எஸ்சிவசங்கர், அரியலூர் மாவட்ட திமுக செயலாளராக 5வதுமுறையாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும், திமுக கட்சி மேலிடம் வெளியிட்ட அறிவிப்பின்படி, மாவட்ட அவைத் தலைவர் சந்திரசேகர், மாவட்ட துணைச் செயலாளர் ( பொது ) சி.சந்திரசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ( ஆதிதிராவிடர் ) மு. கணேசன்,மாவட்டத் துணைச் செயலாளர் ( மகளிர் ) லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுபா. சந்திரசேகரன்,எம். பி.பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு,ஆர்.எம். அன்பழகன்,சி.எம் .ஷாஜகான், சி ஆர் எம் பொய்யாமொழி, சு.ஜமதி அரியலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கோ அறிவழகன், அரியலூர் தெற்கு ஒன்றிய செயலாளர்மா.அன்பழகன், ஜெயங்கொண்டம் வடக்கு ஒன்றிய செயலாளர் டிதனசேகர், ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றிய செயலாளர்இரா.மணிமாறன், தா.பழூர்கிழக்குஒன்றிய செயலாளர் கா. சொ. க.கண்ணன் எம்.எல்.ஏ,தா.பழூர்மேற்குஒன்றியசெயலாளர் வா.சௌந்தர்ராஜன், திருமானூர்கிழக்குஒன்றியசெயலாளர்இரா.கென்னடி,திருமானூர் மேற்குஒன்றிய செயலாளர் ரெ.அசோகச் சக்கரவர்த்தி, செந்துறை வடக்கு ஒன்றிய செயலாளர்வி.எழில்மாறன், செந்துறை தெற்குஒன்றிய செயலாளர் பூ செல்வராஜ், ஆண்டிமடம் வடக்குஒன்றிய செயலாளர் ரெங்க. முருகன், ஆண்டிமடம்தெற்குஒன்றிய செயலாளர்இரா.கலியபெருமாள்,நகரக் திமுக செயலாளர்கள் இரா முருகேசன் (அரியலூர்),வெ.கொ. கருணாநிதி (ஜெயங்கொண்டம்), உடையார்பாளையம் பேரூர் கழக செயலாளர்ப.கோபாலகிருஷ்ணன்,வரதராஜன் பேட்டை பேரூர் கழக அ. அல்போன்ஸ் உள்ளிட்டோரை கட்சித் டோர்கள்பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.இதனையடுத்து நேற்று, மாவட்ட திமுக அலுவலகத்திற்கு வருகை தந்த தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கருக்கு ,மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உற்சாக வரவேற்பளித்தனர். தொடர்ந்து நிர்வாகிகள் அனைவரும் தமிழக போக்குவரத்துதுறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கருக்கு சால்வை அணிவித்து தங்களது வாழ்த்துக்களைதெரிவித்தனர்.இதனையடுத்து ,தமிழக போக்குவரத்து துறை அமைச்சர்எஸ்.எஸ்சிவசங்கர் மாவட்ட திமுக அலுவலகத்தில் அமைந்துள்ள திமுக முன்னாள் தலைவர் கலைஞரின் சிலைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கட்சி நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# திருவாரூர் மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பூண்டி கலைவாணன் பெரியார்,அண்ணா சிலைகளுக்கு மாலையணிவித்து மரியாதை



திருவாரூர்,அக்.01- திமுக 15வது அமைப்பு கழக தேர்தலில் 3வது முறையாக திருவாரூர் மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பூண்டி கலைவாணன் நேற்று திருவாரூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பெரியார் சிலை,நகர கழக அலுவலகம் அருகில் உள்ள அண்ணா திருவுருவ சிலைகளுக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.பின்னர் சன்னதி தெரு, காட்டூரில் உள்ள அஞ்சுகம் அம்மையார் நினைவிடத்தில் உள்ள கலைஞர்,முரசொலிமாறன் உள்ளிட்ட கழக முன்னோடிகளின் திருவுரு படத்திற்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.இந்த கழக தேர்தலில் வெற்றி பெற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சி தொண்டர்கள் சால்வை அணிவித்து பட்டாசு வெடித்தும்,இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினார்கள்.இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் தன்ராஜ்,பொதுக்குழு உறுப்பினர் செந்தில்,நகர கழக செயலாளர் வாரைபிரகாஷ்,ஒன்றிய கழக செயலாளர்கள் புலிவலம் தேவா,சேகர் கலியபெருமாள்,நகர மன்ற உறுப்பினர் கள்ரஜினிசின்னா,சங்கர்,அசோகன்,வரதராஜன் மற்றும் பிளர்கள்,நகர கழக நிர்வாகிகள்,ஒன்றிய கழக செயலாளர்கள்,பேரூர் கழக செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேசிய விளையாட்டு பளுதூக்குதல்:
# 191 கிலோ எடையை தூக்கி தங்கம் வென்றார் மீராபாய்



**காந்திநகர், அக். 01-**

தேசிய விளையாட்டு பளுதூக்குதல் போட்டியில் பெண்களுக்கான 49 கிலோ எடைப் பிரிவில் மீராபாய் சானு 191 கிலோ எடையைத் தூக்கி தங்கம் வென்றார்.

**வெள்ளிப் பதக்கம்...**


குஜராத் மாநிலத்தில் 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்த மீராபாய் சானு, தேசிய விளையாட்டுப் போட்டியின் பளுதூக்குதல் பிரிவில் எதிர்பார்த்தபடியே தங்கம் வென்று அசத்தினார். பெண்களுக்கான 49 கிலோ எடைப் பிரிவில் இவர் மொத்தம் 191 கிலோ எடையைத் தூக்கி தங்கம் வென்றார்.இந்த பிரிவில் சஞ்சிதா சானு வெள்ளிப் பதக்கமும் (187 கிலோ), ஒடிசாவின் ஸ்னேகா சோரன் வெண்கலப் பதக்கமும் (169 கிலோ) வென்றனர்.

**மணிக்கட்டில் காயம்...**

சமீபத்தில் நடந்த பயிற்சியின்போது தனது இடது மணிக்கட்டில் காயம் ஏற்பட்டதாகவும், அதன்பிறகு மேலும் பிரச்சனை வராமல் பார்த்துக்கொண்டதாகவும் மீராபாய் சானு கூறினார். தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மணிப்பூரின் பிரதிநிதியாக பங்கேற்றது பெருமையான தருணம். தொடக்க விழாவில் மணிப்பூர் குழுவை வழிநடத்தும்படி என்னைக் கேட்டபோது உற்சாகம் இரட்டிப்பானது என்றும் மீராபாய் சானு கூறினார்.

## ஜஸ்ப்ரிட் பும்ரா விலகல் எதிரொலி:
# இந்திய அணியில் முகம்மது சிராஜ்

**புதுடெல்லி, அக். 01-**



காயம் காரணமாக இந்திய வேகப் பந்துவீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா விலகியுள்ள நிலையில், தென் ஆப்பிரிக்க அணிக்கு டி20 தொடரில் எதிரான எஞ்சியுள்ள இரண்டு போட்டிகளுக்கும் அவருக்கு பதிலாக முகம்மது சிராஜ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**முதுகு வலியால்...**

28 வயதான ஜஸ்பிரீத் பும்ரா சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற டி20 கிரிக்கெட் தொடரில் கடைசி இரு ஆட்டங்களில் விளையாடியிருந்தார். இதைத் தொடர்ந்து தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டி 20 தொடரிலும் இடம்பெற்றிருந்தார். ஆனால் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற முதல் டி20 ஆட்டத்தில் பும்ரா பங்கேற்கவில்லை. முதுகு வலி காரணமாக அவர், களமிறங்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

**குணமடைய நீண்ட....**

ஆனால் பும்ரா, இந்திய அணியினருடன் திருவனந்தபுரம் பயணிக்கவில்லை என்பது தெரியவந்தது. தற்போது அவர், முதுகு வலியின் தீவிரத் தன்மையை அறிந்து கொள்ள பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமிக்கு சென்றுள்ளார். முதுகு வலி பிரச்சினைக்கு அறுவை சிகிச்சை தேவை இல்லை என்ற போதிலும் அதில் இருந்து பும்ரா குணமடைய நீண்ட காலம் ஆகும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாளை 2-வது போட்டி...**

இதன் காரணமாக தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டி20 போட்டி மற்றும் டி20 உலகக் கோப்பை தொடரிலிருந்து பும்ரா விலகியுள்ளார். இந்த நிலையில், பும்ராவுக்கு பதிலாக தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டி20 போட்டிகளில் இந்திய அணியில் முகமது சிராஜ் சேர்க்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து நாளை நடக்கும் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக நடக்கும் இரண்டாவது டி20 போட்டியில் விளையாடும் இந்திய அணியுடன் சிராஜ் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், டி 20 உலகக் கோப்பையில் இந்திய அணியில் பும்ராவுக்கு மாற்று வீரர் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## டி-20 உலகக் கோப்பை போட்டி:
# பரிசுத்தொகையை அறிவித்தது ஐ.சி.சி.

**மும்பை, அக். 01-**



டி-20 உலகக் கோப்பையை வெல்லும் அணிக்கான பரிசுத்தொகையை ஐ.சி.சி. நேற்று அறிவித்துள்ளது.

**45 ஆட்டங்கள்...**

அக்டோபர் 16 முதல் நவம்பர் 13 வரை 2022 டி20 உலகக் கோப்பைப் போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெறுகிறது. மொத்தமாக 45 ஆட்டங்கள் அடிலெய்ட், பிரிஸ்பேன், கீலாங், ஹோபர்ட், மெல்போர்ன், பெர்த், சிட்னி நகரங்களில் நடைபெறவுள்ளன. நவம்பர் 9, 10 தேதிகளில் அரையிறுதி ஆட்டங்கள் சிட்னி, அடிலெய்டில் நடைபெறவுள்ளன.

**மெல்போர்னில்...**

இறுதிச்சுற்று ஆட்டம் மெல்போர்ன் மைதானத்தில் நடைபெறுகிறது. டி20 உலகக் கோப்பைப் போட்டியின் பிரதான சுற்றுக்கு (சூப்பர் 12) ஆஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், வங்கதேசம், இங்கிலாந்து, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா ஆகிய 8 நாடுகளும் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள 4 அணிகள் முதல் சுற்றில் போட்டிட்டு அதன் வழியாக பிரதான சுற்றுக்குத் தேர்வாகவுள்ளன. முதல் சுற்றில் மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, நமீபியா, நெதர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், ஸ்காட்லாந்து, அயர்லாந்து, ஜிம்பாப்வே ஆகிய 8 அணிகளும் போட்டியிடவுள்ளன.

**பரிசுத்தொகை...**

சூப்பர் 12 சுற்றின் முதல் ஆட்டத்தில் அக்டோபர் 22 அன்று சிட்னியில் ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளும் அக்டோபர் 23 அன்று மெல்போர்னில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதவுள்ளன. இந்நிலையில் டி20 உலகக் கோப்பைப் போட்டியை வெல்லும் அணிக்கு ரூ. 1.6 மில்லியன் டாலர் வழங்கப்படும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

**8 அணிகளும்....**

அதாவது இந்திய மதிப்பில் ரூ. 13.02 கோடி. 2-ம் இடம் வருகிற அணிக்கு இந்தத் தொகையில் பாதி கிடைக்கும். அதாவது ரூ. 6.51 கோடி. அரையிறுதியில் தோற்கும் அணிகள் தலா ரூ. 3.26 கோடி பெறவுள்ளன. சூப்பர் 12 சுற்றிலிருந்து வெளியேறும் 8 அணிகளும் தலா ரூ. 57 லட்சம் பெறவுள்ளன. டி20 உலகக் கோப்பைப் போட்டியின் ஒட்டுமொத்த பரிசுத்தொகை ரூ. 45.61 கோடி என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

## உலககோப்பை கால்பந்து போட்டி:
# கத்தார் அரசு முக்கிய அறிவிப்பு



22-வது பிபா உலக கோப்பை கால் பந்து போட்டி நவம்பர் 20-ம் தேதி கத்தாரில் தொடங்குகிறது. இந்தப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள 32 அணிகள் 8 பிரிவாகப் பிரிக்கப்பட்டன.உலக கோப்பையை நடத்தும் கத்தார், ஈகுவடார் அணிகள் நவம்பர் 20-ம் தேதி மோதுகின்றன. இந்த நிலையில் உலகக்கோப்பை போட்டியை காண ரசிகர்கள் தடுப்பூசி செலுத்தியிருப்பது கட்டாயமில்லை என கத்தார் அரசு அறிவித்துள்ளது.

ஆனால், பாதுகாப்பான சூழலை மீறுபவர்களுக்கு போட்டியில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் எனவும் ,கொரோனா தொற்று பரவ தொடங்கினால், வீரர்கள் மற்றும் போட்டி அதிகாரிகள் பாதுகாப்பான "பயோ-பப்பில்" கட்டாயப்படுத்தப்படலாம் என்று அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.மேலும் நவம்பர் 20 ஆம் தேதி தொடங்கும் போட்டிக்காக கத்தாருக்கு வருபவர்கள் தாங்கள் விமானம் பயணம் மேற்கொள்ளும் முன் 6 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கொரோனா நெகட்டிவ் என்பதை உறுதிப்படுத்த அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது

# உம்ரானை எடுத்திருக்கலாம்: திலிப் வெங்சர்க்கார் கருத்து



பும்ரா முதுகு வலி காரணமாக ஆசிய கோப்பை தொடரில் இருந்து விலகினார். அதன்பின், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டி20 போட்டியில் விளையாடினார். தற்போது நடைபெற்று வரும் தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் டி20 போட்டியில் விளையாடியபோது, மீண்டும் முதுகு வலி ஏற்பட்டுள்ளது. இதனால் தென்ஆப்பிரிக்கா தொடரில் இருந்து விலகியுள்ளார். ஆகவே, பும்ரா டி20 உலகக்கோப்பை தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் முன்னாள் இந்திய அணி தேர்வாளரான வெங்சர்க்கார், நான் தேர்வாளராக இருந்திருந்தால், இளம் வேகப்பந்து வீச்சாளரான உம்ரான் மாலிக்கை அணியில் சேர்த்திருப்பேன் எனத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வெங்சர்க்கார் கூறுகையில் ''உம்ரான் மாலிக் விஷயத்தில் மாற்றி யோசிக்க ஒன்றுமில்லை. நான் அவரை அணியில் தேர்வு செய்திருப்பேன். ஏனென்றால், அவரது வேகம். அவர் 150 கி.மீட்டர் வேகத்தில் பந்து வீசுகிறார். நீங்கள் அவரை தற்போது தேர்வு செய்ய வேண்டும். அவர் 130 கி.மீட்டர் வேக பந்து வீச்சாளராக இருந்தால், தேர்வு செய்ய இயலாது என்றார்.

# வியட்நாம் ஓபன் பேட்மிண்டன்: காலிறுதிக்கு இந்திய ஜோடி தகுதி

வியட்நாம் பேட்மிண்டன் ஓபன் தொடர் நடந்து வருகிறது. இதில் கலப்பு இரட்டையர் ஜோடி பிரிவில் இந்தியாவின் சிக்கி ரெட்டி-ரோகன் கபூர் காலிறுதிக்கு தகுதி பெற்றனர். இந்த ஜோடி காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஹாங்காங்கின் பேன்காயான்-யுங் ஷிங் சோய் ஜோடியை 21-10, 19-21, 21-18 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது. மற்ற இந்திய ஜோடிகளான மவுரியன் கத்வரன்-குஷான் பாலாஷ்ரி மற்றும் பொக்கா நவனித்-பிரியா கொன்ஜெங்பாம் ஆகியோர் தோல்வி அடைந்தனர்.

# சரியான நேரத்தில் பார்முக்கு திரும்பிய கோலி: ராஸ் டெய்லர்



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ராஸ் டெய்லர். இவர் தற்போது இந்தியாவில் நடந்து வரும் லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார். அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:- ஐ.பி.எல். போட்டியில், பெங்களூர் அணியில் விராட் கோலியுடன் விளையாடிய நேரத்தை மிகவும் ரசித்தேன். 20 ஓவர் உலக கோப்பை போட்டிக்கு முன்பாக சரியான நேரத்தில் விராட் கோலி பார்முக்கு திரும்பி உள்ளார். அவர் சிறந்த பார்மில் இருக்கிறார். வரும் ஆண்டுகளில் நிறைய சதங்கள் அடிப்பார் என்று நம்புகிறேன்.

இந்த உலக கோப்பையில் இன்னும் நிறைய திறமைகள் வெளிப்படும் என்று நினைக்கிறேன். போட்டி ஆஸ்திரேலியாவில் நடப்பதாலும் நடப்பு சாம்பியனாக இருப்பதாலும் கோப்பையை வெல்ல ஆஸ்திரேலியாவுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. இந்திய அணி சம பலத்துடன் இருக்கிறது. மேலும் சொந்த மண்ணில் சில ஆட்டங்களில் அவர்கள் விளையாடிய விதம், உலக கோப்பை போட்டிக்கு செல்வதற்கு அவர்களுக்கு நிறைய நம்பிக்கையை கொடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## புதிதாக 3,947 பேருக்கு கொரோனா:
# இந்தியாவில் 4 ஆயிரத்திற்கு கீழ் சரிந்தது தினசரி பாதிப்பு

**புதுடெல்லி, அக்.1**

இந்தியாவில் நேற்று 4 ஆயிரத்திற்கு கீழ் குறைந்தது தினசரி கொரோனா பாதிப்பு. புதிதாக 3,947 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு தொடர்பான விவரத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டது. அதன்படி, இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 3 ஆயிரத்து 947 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது நேற்றைய பாதிப்பான 4 ஆயிரத்து 272-ஐ விட குறைவாகும். இதனால், நாட்டில் இதுவரை கொரோனாவால் பாதிக்கபட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 45 லட்சத்து 87 ஆயிரத்து 307 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 4 கோடியே 40 லட்சத்து 19 ஆயிரத்து 95 பேர் குணமடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 39 ஆயிரத்து 583 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா தாக்குதலுக்கு கடந்த 24 மணி நேரத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால், இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 28 ஆயிரத்து 629 ஆக அதிகரித்துள்ளது.அதேவேளை நாடு முழுவதும் இதுவரை 218கோடியே 52 லட்சத்து 16 ஆயிரத்து 710 தடுப்பூசி டோஸ்கள் மக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## கடந்த ஆண்டில் தாஜ்மகாலை விட
# மாமல்லபுரத்துக்கு வருகை தந்த அதிக வெளிநாட்டினர்
## மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் தகவல்

**சென்னை, அக். 01-**

2021-ம் ஆண்டில் தாஜ்மகாலை விட மாமல்லபுரத்துக்கு அதிகம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்ததாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2021-2022ம் ஆண்டின் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்த நினைவுச் சின்னங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் 1,44,984 பேர் மாமல்லபுரம் சிற்பங்களை காண வருகை தந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தாஜ்மகாலுக்கு வெறும் 38,922 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மட்டுமே சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்துக்கு வந்த பயணிகளை விட தாஜ்மகாலுக்கு சென்ற பயணிகள் எண்ணிக்கள் 33 சதவிதம் குறைவாக இருந்து உள்ளது. அதிக வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்த இடங்களின் பட்டியலில் 3-வது இடத்தில் சாளுவன்குப்பம், புலிக்குடைவரை, 5-வது இடத்தில் செஞ்சி கோட்டை உள்ளன. உள்நாட்டு சுற்றுலா பயணிகள் அதிகம் செல்லும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதல் இடத்திலும், உத்தரபிரதேசம் 2-வது இடத்திலும் உள்ளன. தமிழ்நாட்டிற்கு 14 கோடி உள்நாட்டு பயணிகள் வருகை தந்துள்ளனர். இதேபோல, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகம் வந்த மாநிலங்கள் பட்டியலிலும் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது.

# ரேஷன் கடைகளில் காலிப்பணியிடங்கள் தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படும்
## அமைச்சர் பெரியசாமி தகவல்

**திண்டுக்கல், அக். 01-**

தமிழகத்தில் ரேசன் கடைகளில் காலியாக உள்ள 4403 பணி இடங்கள் 10 மற்றும் 12ம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலும் நேர்முகத் தேர்வில் பெறுகின்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் பணி நியமனம் செய்யப்படும். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கால விதிமுறை ஊதியத்தின் அடிப்படையிலேயே நியமிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ரேசன் கடைகளில் காலியாக உள்ள 4403 பணி இடங்கள் நிரப்பப்பட உள்ளது. விற்பனையாளர், எடையாளர் ஆகிய 2 பணிகளுக்கு தேர்வு செய்வதற்காக கூட்டுறவுத்துறை மூலம் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் இ.பெரியசாமி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

விற்பனையாளருக்கு ரூ.8500 சம்பளம், எடையாளருக்கு ரூ.6500 சம்பளம் தொகுப்பூதியம் மூலம் பணி நிரந்தரம் செய்யப்பட உள்ளது. இட ஒதுக்கீட்டின் பேரிலும் சமூக நீதி அடிப்படையிலும் சமமாக எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். 10 மற்றும் 12ம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலும் நேர்முகத் தேர்வில் பெறுகின்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் பணி நியமனம் செய்யப்படும்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கால விதிமுறை ஊதியத்தின் அடிப்படையிலேயே நியமிக்கப்படுவார்கள். இது கடைசி மட்ட பணி என்பதால் கூட்டுறவுத்துறை மூலம் தேர்வு நடைபெறுகிறது. இந்த பணி நியமனத்தில் அரசியல் தலையீடு இருக்காது. வருவாய்த் துறை, சிவில் சப்ளை அதிகாரிகள் கூட்டுறவுத்துறை மற்றும் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் சார்பில் தேர்வு நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# பி.எப்.ஐ அமைப்பிற்கு தடைவிதித்து புதுச்சேரி அரசு அரசாணை வெளியீடு

**சென்னை, அக். 01-**

தமிழகத்தை தொடர்ந்து புதுச்சேரியிலும் பி.எப்.ஐ அமைப்பிற்கு தடைவிதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற இஸ்லாமிய அமைப்பு நாட்டில் பயங்கரவாத தாக்குதல் நடத்த திட்டம், பயங்கரவாத செயல்களுக்கு நிதிஉதவி அளித்தல், பயங்கரவாத செயலுக்கு பயிற்சி, பயங்கரவாத செயலுக்கு ஆட்கள் சேர்த்தல் உள்பட பல்வேறு புகார்கள் எழுந்தன.

இது, தொடர்பாக 15 மாநிலங்களில் 93 இடங்களில் தேசிய புலனாய்வு அமைப்பு, அமலாக்கத்துறை கடந்த 22-ம் தேதி அதிரடி சோதனை நடத்தியது. இந்த சோதனையின் போதும் பலர் கைது செயப்பட்ட நிலையில், சர்ச்சைக்குரிய பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

இதனை தொடரந்து, பிஎப்ஐ மற்றும் அதன் துணை அமைப்புகளை சட்டவிரோத அமைப்புகளாக அறிவித்த மத்திய உள்துறை அமைச்சகம் இந்த அமைப்புகள் 5 ஆண்டுகள் இந்தியாவில் செயல்பட தடை விதித்து அதிரடி உத்தரவை பிறப்பித்தது.

இந்த உத்தரவை செயல்படுத்தும் விதமாக பல்வேறு மாநில அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுத்து வருகின்றது. அந்த வகையில் மத்திய அரசின் உத்தரவை செயல்படுத்தும் விதமாக தமிழகத்தில் பிஎப்ஐ அமைப்புக்கு தடைவித்து தமிழக அரசு அதிகாரப்பூர்வமான அரசாணையை நேற்று முன்தினம் வெளியிட்டது. இந்த நிலையில், தமிழகத்தை தொடர்ந்து புதுச்சேரியிலும் பிஎப்ஐ அமைப்பை தடை செய்து நேற்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## முப்படைகளின் தலைமை தளபதி
# அனில் சவுகான் தேசிய போர் நினைவிடத்தில் மரியாதை

**புதுடெல்லி, அக்.01**

புதிதாக நியமிக்கப்பட்ட முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான் தேசிய போர் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

ராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற அனில் சவுகானுக்கு முப்படைகளின் தலைமை தளபதி பதவி வழங்கப்பட்டு இருக்கிறது. முப்படைகளின் தலைமை தளபதி பதவியில் இதற்கு முன்பு பிபின் ராவத் பணியமர்த்தப்பட்டார். அவருக்கு அடுத்தாக, ராணுவ தளபதியாக இருந்த எம்.எம். நரவனே புதிய தலைமை தளபதி ஆவார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவர் 62 வயதை பூர்த்தி அடையாதவராக இருந்தால், லெப்டினெட் ஜெனரல் அல்லது ஜெனரல் பணி நிலையில் ஓய்வு பெற்றிருந்தால் அவரை முப்படைகளின் தலைமை தளபதியாக நியமிக்கலாம் என கடந்த ஜுன் மாதம் விதியில் திருத்தம் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற அனில் சவுகானுக்கு முப்படைகளின் தலைமை தளபதி பதவி வழங்கப்பட்டு இருக்கிறது. முப்படைகளின் அடுத்த தலைமை தளபதியாக நியமிக்கப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் அனில் சவுகான், அவரது தந்தை சுரேந்திர சிங் சவுகானுடன் டெல்லியில் தேசிய போர் நினைவிடத்தில் நேற்று மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து, ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே, விமானப் படை தலைமை ஏர் சீப் மார்ஷல் விஆர் சவுதாரி, ஏர் மார்ஷல் பிஆர் கிருஷ்ணா மற்றும் கடற்படை துணைத் தளபதி வைஸ் அட்மிரல் எஸ் என் கோர்மேட் ஆகியோருடன் முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான் பேசினார்.

இவர் முப்படைகளின் தலைமை தளபதியாக மட்டுமின்றி, பாதுகாப்பு மந்திரியின் ராணுவ ஆலோசகர், அணு ஆயுதக்கட்டளை ஆணையத்தின் ஆலோசகர் போன்ற பொறுப்புகளையும் வகிப்பார். அடுத்த மாதம் குஜராத்தில் நடைபெற உள்ள பாதுகாப்பு கண்காட்சியில் முப்படை தலைமை தளபதியின் தேவை அவசியம் என கருதி இந்த நியமனம் செய்யப்பட்டு உள்ளதாகவும் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# கடலூர் சிறையில் சவுக்கு சங்கர் உண்ணாவிரதம்

**கடலூர், அக். 01-**

கடலூர் மத்திய சிறையில் பார்வையாளர்கள் வருகைக்கு தடை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிறையில் உள்ள சவுக்கு சங்கர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் ஐகோர்ட் தீர்ப்பு குறித்தும், நீதிபதிகள் குறித்தும் அவதூறாக பதிவிட்டது தொடர்பாக சவுக்கு சங்கர் மீது அவமதிப்பு வழக்கை மதுரை ஐகோர்ட் ஏற்கனவே பதிவு செய்திருந்தது.

இந்த நடவடிக்கைக்கு பின்னரும், யூடியூப் சேனலில் இந்த விவகாரம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக, கிரிமினல் அவமதிப்பு வழக்கும் மதுரை ஐகோர்ட் பதிவு செய்தது. இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், புகழேந்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அதில் நீதித்துறையை அவதூறாக விமர்சித்த வழக்கில் அவமதிப்பு நடவடிக்கையாக சவுக்கு சங்கருக்கு 6 மாதம் சிறை தண்டனை வழங்கி மதுரை ஐகோர்ட் உத்தரவிட்டது.

அதன்படி சவுக்கு சங்கர் மதுரை மத்திய சிறையில் அடைக்கபட்டார். பின்னர் நிர்வாக காரணங்கள் மற்றும் அச்சுறுத்தலால் சவுக்கு சங்கர், மதுரை சிறையில் இருந்து கடலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். கடந்த 16-ந்தேதி முதல் சவுக்கு சங்கர் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் சவுக்கு சங்கரை சிறையில் பார்வையாளர்கள் சந்திக்க ஒரு மாதத்திற்கு கடலூர் மத்திய சிறை நிர்வாகம் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. பார்வையாளர்கள் வருகைக்கு தடை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மத்திய சிறையில் உள்ள சவுக்கு சங்கர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தலைமையில், அனைத்து அரசு போக்குவரத்துக்கழகங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச்செயலாளர் கே.கோபால், சிறப்பு செயலாளர் டி.என்.வெங்கடேஷ், துணைச்செயலாளர், அனைத்து போக்குவரத்து கழகங்களின் மேலாண் இயக்குநர்கள், மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் போக்குவரத்துத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், பதிவுத்துறையில் பணியாற்றி பணிக்காலத்தின்போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி வழங்கிடும் அடையாளமாக 7 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். அருகில் வணிகவரித்துறை முதன்மைச்செயலாளர் தீரஜ்குமார், பதிவுத்துறை செயலாளர் பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் ம.ப.சிவனருள் ஆகியோர் உடனிருந்தனர்.

## நவம்பர் 6-ல் ஆர்.எஸ்.எஸ். பேரணி...(1-ம் பக்க தொடர்ச்சி)

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பேரணிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று தமிழக போலீசாருக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

**ஐகோர்ட் எச்சரிக்கை...**

ஆர்.எஸ்.எஸ் அணி வகுப்புக்கு அனுமதி மறுத்ததை எதிர்த்து தொடரப்பட்ட அவமதிப்பு வழக்கில் ஐகோர்ட் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும் அனுமதி வழங்க மறுத்தால் கோர்ட்டு அவமதிப்பு நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்று ஐகோர்ட்டு எச்சரித்து வழக்கை அக்டோபர் 31-ந்தேதிக்கு ஒத்திவைத்தது.

### காந்திநகர் - மும்பை இடையே

## வந்தே பாரத் விரைவு ரெயில் பயணத்தை துவக்கி வைத்தார் பிரதமர் நரேந்திரமோடி

காந்திநகர், அக்.01-

குஜராத் மாநிலத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி 2-வது நாளாக நேற்று மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்துடன் கூடிய வந்தே பாரத் விரைவு ரெயிலை கொடியசைத்து தொடக்கி வைத்தார். காந்திநகர்-மும்பை இடையே இயக்கப்படும் இந்த ரெயிலில், ரெயில்வே ஊழியர்கள் உள்பட பல்வேறு தரப்பு மக்களுடன் அகமதாபாத் வரை பிரதமர் பயணம் செய்தார்.

நிகழ்ச்சியில் குஜராத் ஆளுநர் ஆச்சார்யா தேவ்ரத், ரெயில்வே மந்திரி அஷ்வினி வைஷ்ணவ், மத்திய மந்திரி ஹர்தீப்சிங் பூரி, குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த ரெயில் நாட்டின் இயக்கப்படும் 3-வது வந்தே பாரத் விரைவு ரெயில் ஆகும்.

இதைத் தொடர்ந்து அகமதாபாத் நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் கட்டத்தை பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாலையில் பனஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள அம்பாஜி நகரில் நடைபெறும் நிகழ்ச்சியில் 7,200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.

பின்னர் அங்கு நடைபெற்ற தொடக்க விழாவில் பேசிய பிரதமர் பேசியதாவது., 9 முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் மற்றும் பொறியியல் படிக்கும் மாணவர்கள், மெட்ரோ பணிகள் எப்படி நடக்கிறது என்பதை பார்க்க வேண்டும். இந்த மெட்ரோ ரெயில் பணிகளுக்காக ஏற்படும் செலவு, சுரங்கப்பாதைகள் அமைத்தல் போன்றவற்றை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மெட்ரோ கட்டுமானத்தில் ஈடுபட்டுள்ள செயல்முறை பற்றி மாணவர்கள் அறிந்த பிறகு பொதுச் சொத்துக்களை அழிக்கும் எந்த போராட்டத்திலும் மாணவர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்றார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, அனைத்து அரசுத்துறை செயலாளர்களுடன் துறைகளின் செயல்பாடுகள் குறித்து நேற்று ஆய்வு மேற்கொண்டார்.



● மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்று வரும் நவராத்திரி திருவிழாவின் 5-ம் நாளான நேற்று மீனாட்சி அம்மன் ஊஞ்சல் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

### வேட்பு மனுத்தாக்கல் நிறைவு:

## காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல் இன்று வெளியீடு

புதுடெல்லி,அக்.01-

காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்றோடு முடிந்தது. 3 பேர் மனுத்தாக்கல் செய்துள்ள நிலையில் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியாகும் என கட்சியின் தேர்தல் ஆணைய தலைவர் மதுசூதன் மிஸ்த்ரி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு அக்டோபர் மாதம் 17-ந் தேதி தேர்தல் நடத்தப்படுகிறது. இந்த தேர்தலில் சோனியா காந்தி குடும்பத்தில் இருந்து யாரும் போட்டியிடவில்லை. காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு மூத்த தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, சசிதரூர், ஜார்கண்ட் மாநில காங்கிரஸ் தலைவர் கேஎன் திரிபாதி ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

முன்னதாக, காங்கிரஸ் தலைவர் தேர்தலில், ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் போட்டியிடாத நிலையில், மத்திய பிரதேச மாநில முன்னாள் முதல்-மந்திரியும், மாநிலங்களவை எம்.பி.யுமான திக்விஜய்சிங் (75), தான் போட்டியிடப்போவதாக அறிவித்தார். திடீர் திருப்பமாக மல்லிகார்ஜூன கார்கேவுக்கு ஆதரவாக திக்விஜயசிங் போட்டியிட போவதில்லை என நேற்று அறிவித்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியாகும் என கட்சியின் தேர்தல் ஆணைய தலைவர் மதுசூதன் மிஸ்த்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், மல்லிகார்ஜூன கார்கே 14 படிவங்களை தாக்கல் செய்துள்ளார். சசிதரூர் 5 படிவங்களும், கே.என் திரிபாதி ஒரு படிவமும் தாக்கல் செய்துள்ளனர். தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இன்று பரிசீலணை செய்து, இன்று மாலை வேட்பாளர் பட்டியலை அறிவிப்போம். தேர்தலில் போட்டியிடும் 3 பேரில் யாரும் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் இல்லை. அவர்கள் தனித்து போட்டியிடுகிறார்கள்.

கட்சியின் தலைவரை தேர்ந்தெடுக்கும் முறையில் நடுநிலை வகிப்பதாக சோனியா காந்தி தெரிவித்துள்ளார். மேலும், போட்டியிடும் வேட்பாளர்கள் யாருக்கும் அவரது ஆதரவு உள்ளது என கூறினால் அது தவறானது எனஅவர் மிக தெளிவாக கூறி உள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ரெப்போ வட்டி விகிதம் உயர்வு:

## தனிநபர், வாகன கடன் வட்டி உயர வாய்ப்பு

புதுடெல்லி,அக்.01-

வங்கிகளுக்கான குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி 0.5 சதவீதம் உயர்த்தி ரிசர்வ் வங்கி அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. இதனால் தனிநபர் கடன், வாகன கடன்களுக்கான வட்டி உயர வாய்ப்புள்ளது.

ரிசர்வ் வங்கியின் கவர்னர் சக்திகாந்த தாஸ் நேற்று ரெப்போ விகிதத்தை அல்லது முக்கிய கடன் வட்டி விகிதத்தை 0.5 சதவீதம் உயர்த்தினார். ரிசர்வ் வங்கி கடந்த மூன்றாண்டுகளில் அதிகபட்சமாக 5.9 சதவீதமாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக அவர் கூறியதாவது;-

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி எதிர்பார்ப்புகளை விட குறைவாக இருந்தபோதிலும் முதல் காலாண்டில் ஜிடிபி ஆண்டுக்கு ஆண்டு 13.5 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. உலகப் பொருளாதாரம் சிக்கலில் உள்ளது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியா அதிர்ச்சிகளைத் தாங்கியுள்ளது. பணவீக்கம் 7 சதவீதமாக உள்ளது மற்றும் ஆண்டின் இரண்டாம் பாதியில் 6 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என கூறினார்.

## தமிழகத்தை செல்போன் உற்பத்தி...(1-ம் பக்க தொடர்ச்சி)

வரவேற்கிறோம். இது போன்ற முயற்சியால் தான், அண்மையில் தமிழகத்தில் செமி கண்டக்டர் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது சீனாவில் தான் புதிய செல்போன் மாடல்கள் பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன. அதனை மாற்றி தமிழகத்தையும் அத்தகைய உற்பத்தி மையமாக மாற்றிட வேண்டும் என்ற நோக்கோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம். ஸ்மார்ட்போன்கள் உற்பத்திக்கான முழு விநியோக சங்கிலியையும் தமிழகத்திற்கு கொண்டு வரும் முயற்சிகளிலும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இத்தகைய நேரத்தில் பெகாட்ரான் நிறுவனத்தின் ஸ்மார்ட்போன் உற்பத்தி திட்டம் இங்கு தொடங்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியை அளிக்கிறது. அதே நேரம் உங்களுடைய இரண்டாவது கட்ட உற்பத்தித் திட்டத்தையும் விரைவில் நீங்கள் இங்கு தான் தொடங்க வேண்டும். அரசுத் தரப்பில் அதற்காக நாங்கள் அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக இருக்கிறோம். மேலும் உங்கள் விரிவாக்கத் திட்டத்தையும், மின் உற்பத்தி திட்டங்களையும் தமிழகத்திலேயே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழகத்தில் 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, அக்.01-

தமிழகத்தில் நீலகிரி, கோவை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திர கடலோரப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (அக்.1-ம் தேதி) தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரையில், அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 33 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

### ஜம்மு-காஷ்மீரில்

## 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், அக். 01-

ஜம்மு காஷ்மீரில் உள்ள பாரமுல்லாவில் பாதுகாப்பு படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஜம்மு காஷ்மீரில் உள்ள பாரமுல்லாவில் பாதுகாப்பு படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பாரமுல்லா பகுதியில் நேற்று அதிகாலை பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே என்கவுன்டர் நடந்தது.

இதில், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான ஜெய்ஷ்-இ-முகமது உடன் தொடர்புடைய 2 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக காஷ்மீர் கூடுதல் காவல் துறை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

மேலும், பதுங்கியுள்ள பயங்கரவாதிகளை தேடும் பணி நடந்து வருவதாகவும், இது தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்படும் என்றும் காஷ்மீர் கூடுதல் காவல்துறை இயக்குனர் தெரிவித்தார்.

## தொடர் விடுமுறை: சிறப்பு பஸ்களில் இதுவரை 48 ஆயிரம் பேர் முன்பதிவு

சென்னை, அக்.01-

தமிழகத்தில் தொடர் விடுமுறையையொட்டி சிறப்பு பஸ்களில் இதுவரை 48 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். இதனால் நெரிசலின்றி பொதுமக்கள் பயணிக்கும் வகையில் இன்றும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது.

ஆயுதபூஜை, விஜய தசமி ஆகிய பண்டிகைகள் அடுத்த (அக்டோபர்) மாதம் 4, 5 ஆகிய தேதிகளில் கொண்டாடப்படுகிறது. இதற்காக சொந்த ஊருக்குச் செல்ல விரும்பும் பெரும்பாலான அரசு ஊழியர்கள், மாணவர்கள், உள்ளிட்டோர், இடையில் இருக்கும் திங்கள்கிழமை (அக்.3) ஒரு நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு, நேற்று முதலே பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதனால் நெரிசலின்றி பொதுமக்கள் பயணிக்கும் வகையில் இன்றும், (அக்.1) சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது. அதன்படி, சென்னையில் இருந்து நாள்தோறும் இயக்கப்படும் 2,100 பஸ்களுடன், 2,050 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. இதேபோல் பிற ஊர்களில் இருந்து மற்ற பகுதிகளுக்கு 1,650 சிறப்புப் பஸ்களை இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பண்டிகையை கொண்டாட அரசு பஸ்களில் ஊர்களுக்கு செல்ல செப்.30, அக்.1,2 ஆகிய நாள்களில் 48 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளதாகவும், அதே நேரம் வழக்கமாக விழாக் காலங்களில் இயக்கப்படுவதுபோல் சென்னை, கோயம்பேட்டில் இருந்து செல்லும் சில ஊர்களுக்கான பஸ்கள், தாம்பரம் மெப்ஸ், பூந்தமல்லி பைபாஸ் ஆகிய பகுதிகளில் இருந்து இயக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.